தின பூமி
thinaboomi.com

திருச்சி, சனி, பிப்ரவரி 04, 2023 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 8 ₹ 3.00



அமெரிக்காவில் பிரதிநிதிகள் சபையில் இந்திய வம்சாவளி எம்.பி.க்கள் 4 பேருக்கு முக்கிய பதவி

...2-ம் பக்கம்

பெங்களூருவில் இந்திய எரிசக்தி வாரத்தை பிப். 6-ல் தொடங்கி வைக்கிறார் பிரதமர் மோடி

...3-ம் பக்கம்

ஆஸி.க்கு எதிரான டெஸ்ட்: நாக்பூரில் பயிற்சியை துவங்கிய இந்திய வீரர்கள்

...7-ம் பக்கம்





சென்னை தலைமைச்செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், 570 ஒப்பந்த செவிலியர்களுக்கு நிரந்தர பணி ஆணைகள், மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தால் 177 இருட்டறை உதவியாளர்கள் மற்றும் 19 ஆய்வக நுட்புநர் நிலை-II பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள், இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு கருணை அடிப்படையில் 21 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் என மொத்தம் 787 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

### 54-வது நினைவு தினம்:

# சென்னை அண்ணா நினைவிடத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை

சென்னை, பிப். 04-

பேரறிஞர் அண்ணாவின் 54-வது நினைவு தினத்தை முன்னிட்டு, சென்னையில் உள்ள அவரது நினைவிடத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

பேரறிஞர் அண்ணாவின் 54-வது நினைவு தினம் நேற்று தமிழகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது. அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு தி.மு.க. சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணியானது சென்னை திருவல்லிக்கேணி வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து தொடங்கி அண்ணா சதுக்கம் வரை பேரணி நடைபெற்றது.

இந்த பேரணியில், தி.மு.க.அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், மாவட்ட செயலர்கள், தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டனர். பேரணியின் முடிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மெரினாவில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

அதனை தொடர்ந்து அமைச்சர்கள் துரைமுருகன், சேகர்பாபு, பொன்முடி, மா.சுப்பிரமணியன், முத்துசாமி, எம்.ஆர்.காந்தி, உதயநிதி ஸ்டாலின், தி.மு.க. எம்.பி. டி.ஆர் பாலு உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

இந்த நிலையில் அண்ணாவின் நினைவு தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது.

களம் சென்று காணுகின்ற வெற்றிக்கு நம்மையெல்லாம் ஊக்குவிக்கும் தமிழ்த்தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணா நீடுதுயில் கொண்ட நாள். தம்பி என்று தமிழர்தமைத் தட்டியெழுப்பிய அண்ணனின் நினைவுகளைச் சுமந்து, தம்பிமார் படை அமைதிப் பேரணிச் சென்றோம். இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்ற அண்ணனின் முழக்கத்தை என்றும் மெய்ப்பிக்க உறுதியேற்போம். தனயனாய் அவர் பெயரிட்ட தமிழ்நாட்டை மேதினியில் உயரக் கொண்டு செல்வோம் என்று பதிவிட்டுள்ளார்.

# தி.மு.க.வை எதிர்க்கட்சிகள் இணைந்து எதிர்க்க வேண்டும்

### பா.ஜ.க மேலிட பொறுப்பாளர் சி.டி.ரவி பேட்டி

சென்னை, பிப். 04-

எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் இணைந்து செயல்பட வலியுறுத்தினோம் என்று பாஜக மேலிட பொறுப்பாளர் சி.டி.ரவி தெரிவித்தார்.

பரபரப்பான அரசியல் சூழலில் அண்ணாமலை கடந்த 1 ஆம் தேதி இரவு டெல்லிக்கு அவசரமாக பயணப்பட்டார். டெல்லி சென்ற அண்ணாமலை பாஜக தேசிய தலைவர் ஜே.பி.நட்டாவை நேற்று முன்தினம் (ஜன.2) காலை அவரது இல்லத்தில் சந்தித்தார். அப்போது அவர் தமிழக அரசியல் மற்றும் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் நிலவரம் தொடர்பாக நட்டாவிடம் எடுத்துரைத்ததாக தெரிகிறது. மேலும், சில முக்கியத் தலைவர்களை சந்தித்த அண்ணாமலை, ஈரோடு இடைத்தேர்தலில் பாஜக என்ன நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்பது குறித்து விவாதித்ததாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்று (ஜன.3) காலை எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர் செல்வத்தை பாஜக தலைவர் அண்ணாமலை மற்றும் பாஜக மேலிட பொறுப்பாளர் சி.டி.ரவி ஆகியோர் நேரில் சந்தித்து பேசினர். இது குறித்து சென்னை தியாகராய நகரில் உள்ள பாஜக தலைமையகம் கமலாலயத்தில் செய்தியாளர்களை சந்தித்த பாஜக மேலிட பொறுப்பாளர் சி.டி.ரவி, "தமிழக மக்களுக்கு எதிரான கட்சி திமுக. திமுக அரசு மீது மக்களிடம் நம்பிக்கை இல்லை. மின் கட்டணம், பால் விலை உயர்வு, சொத்து வரி உயர்வு ஆகியவற்றை உயர்த்தி திமுக தமிழக மக்களை வஞ்சித்துள்ளது. இந்த ஆட்சி மக்களிடம் கெட்ட பெயர் வாங்கியுள்ளது.

இந்த நேரத்தில் நிலையான, உறுதியான தேசிய ஜனநாயக கூட்டணி தான் தமிழகத்திற்கு தேவை. திமுகவை எதிர்க்க வேண்டும் என்றால் உறுதியான, நிலையான வேட்பாளர் வேண்டும். தி.மு.க.வை எதிர்க்கட்சிகள் இணைந்து எதிர்க்க வேண்டும். திமுகவை வீழ்த்த ஒருங்கிணைந்த அதிமுக வேண்டும் என்று வலியுறுத்தினோம் தமிழக நலனுக்காக இணைந்து செயல்படுமாறு எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர் செல்வத்திடம் கூறினோம். ஒன்றிணைந்து இருந்தால் திமுகவை வீழ்த்த முடியும் என்று கூறினோம். பாஜக நிலைப்பாடு குறித்து தெரிவிக்க பிப்.7 ஆம் தேதி வரை அவகாசம் உள்ளது."

இவ்வாறு அவர் கூறினார்.

### ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்:

# பாதுகாப்பு பணிக்கு மத்தியப்படை வருகை: தேர்தல் ஆணையர் தகவல்

சென்னை, பிப். 04-

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலுக்கு 2 கம்பெனி மத்திய ஆயுதப்படையைச் சேர்ந்த காவல் துறை பாதுகாப்பு வழங்கவுள்ளதாக தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் எம்எல்ஏ திருமகன் ஈவெரா திடீர் மறைவால் ஈரோடு கிழக்கு தொகுதிக்கு வரும் பிப்ரவரி 27 ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

திமுக கூட்டணியில் காங்கிரஸ் கட்சி போட்டியிடுகிறது. வேட்பாளராக திருமகன் ஈவெராவின் தந்தை ஈவிகேஎஸ். இளங்கோவன் போட்டியிடுகிறார். அமமுக சார்பில் சிவபிரசாத், தேமுதிக சார்பில் ஆனந்த், நாம் தமிழர் சார்பில் மேனகா ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில் ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலுக்கு 2 கம்பெனி மத்திய ஆயுதப்படையைச் சேர்ந்த காவல் துறை பாதுகாப்பு வழங்கவுள்ளதாக தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தெரிவித்துள்ளார்.

ஈரோடு கிழக்கு தொகுதியில் பிப்ரவரி 13ஆம் தேதி முதல் மத்திய ஆயுதப்படை காவல் துறை பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### ஈரோடு கிழக்கு தொகுதி அ.தி.மு.க. வேட்பாளரை

# பொதுக்குழுவை கூட்டி இறுதி செய்ய வேண்டும்

### வாக்கெடுப்பு நடத்தி தேர்வு செய்ய சுப்ரீம் கோர்ட் உத்தரவு

புதுடெல்லி, பிப். 04-

தனது கையொப்பமிட்ட விண்ணப்பத்தை தலைமை தேர்தல் ஆணையம் ஏற்க உத்தரவிடக் கோரி எடப்பாடி பழனிசாமி தொடர்ந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட் அ.தி.மு.க. வேட்பாளரை பொதுக்குழுவை கூட்டி இறுதி செய்ய வேண்டும் என்றும், வேட்பாளர் தேர்வு செய்யப்பட்ட முடிவை தேர்தல் ஆணையத்திற்கு அவைத் தலைவர் தெரிவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

**இ.பி.எஸ். முறையீடு...**

சுப்ரீம் கோர்ட் நீதிபதி மகேஷ்வரி தினேஷ் தலைமையிலான அமர்வு முன்பு கடந்த வாரம் அ.தி.மு.க. இடைக்காலப் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஒரு முறையீடு செய்யப்பட்டது. அதில், "ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் எங்களது தரப்பில் தனியாக வேட்பாளரை நிறுத்த விரும்புகிறோம். ஆனால், கட்சியின் இடைக்காலப் பொதுச் செயலாளர் என்ற முறையில் எனது கையொப்பத்துடன் அனுப்பக் கூடிய விண்ணப்பத்தை இந்திய தேர்தல் ஆணையம் ஏற்க மறுக்கிறது. எனவே, இந்த விண்ணப்பத்தை அங்கீகரிக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று முறையிடப்பட்டது.

**பதில்மனு தாக்கல்...**

ஜனவரி 30-ம் தேதியன்று, தனது கையொப்பமிட்ட விண்ணப்பத்தை தேர்தல் ஆணையம் ஏற்க உத்தரவிடக் கோரி எடப்பாடி பழனிசாமி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் ஓ. பி.எஸ் மற்றும் தேர்தல் ஆணையம் தரப்பில் நேற்று முன்தினம் பதில்மனு தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து தேர்தல் ஆணையம் தாக்கல் செய்த பதில் மனுவில், அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சியின் வேட்பாளரின் வேட்புமனுவை ஏற்பது தொடர்பாக தேர்தல் நடத்தும் அதிகாரிக்குத்தான் அதிகாரம் உள்ளது. எனவே, வேட்புமனுவை ஏற்பது தொடர்பாக சம்மந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அதிகாரி முடிவு செய்வார்.

**தாக்கல் செய்யும்...**

மேலும், யார் கட்சியின் பொறுப்பாளராக இருப்பவர்களின் கையெழுத்து அங்கீகரிக்கப்படுவது என்பதுதான் விதி. அதன் அடிப்படையில் அ.தி.மு.க.வின் பொறுப்பாளர் என்ற முறையில் ஆவணத்தில் இருக்கும் கையெழுத்து ஏற்கப்படும். இந்த விவகாரத்தில் இன்னும் விரிவான பதிலை சுப்ரீம் கோர்ட் எதிர்பார்த்தால் அதனை தேர்தல் ஆணையம்

(கடைசி பக்கம் பார்க்க)

# தெருக்கூத்து கலைஞர் நெல்லை தங்கராஜ் மறைவு

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, பிப். 04-

பரியேறும் பெருமாள் படத்தில் நடித்த தெருக்கூத்து கலைஞர் நெல்லை தங்கராஜ் மறைவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

கூத்துக் கலைஞர் நெல்லை தங்கராஜ் உடல்நலக்குறைவால் மறைந்த செய்தி கேட்டு மிகவும் வேதனையடைந்தேன். மக்கள் கலைஞரான தங்கராஜ், பரியேறும் பெருமாள் திரைப்படத்தில் அறிமுகமாகி, அதில் வெளிப்படுத்திய உணர்வுப்பூர்வமான நடிப்பால் நம் அனைவரின் மனதிலும் நீங்கா இடம் பிடித்தவர்.

அன்னாரது மறைவினால் வாடும் குடும்பத்தினருக்கும், கலையுலகினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களையும் ஆறுதலையும் உரித்தாக்கிக் கொள்கிறேன். இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

### பி.பி.சி. ஆவணப்பட தடை குறித்த வழக்கு:

# 3 வாரத்தில் மத்திய அரசு பதிலளிக்க வேண்டும்

### சுப்ரீம் கோர்ட் உத்தரவு

புதுடெல்லி, பிப். 04-

பிரதமர் குறித்த சர்ச்சைக்குரிய பி.பி.சி. ஆவணப்படத்திற்கு விதிக்கப்பட்ட தடைக்கு எதிராக தொடரப்பட்ட பொதுநல மனுக்களுக்கு 3 வார காலத்திற்குள் பதிலளிக்க உத்தரவிட்டு மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட் வெள்ளிக்கிழமை நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

கடந்த 2002ம் ஆண்டு நடந்த குஜராத் கலவரம் குறித்து பி.பி.சி. நிறுவனம் ஆவணப்படத்தை வெளியிட்டிருந்தது. இந்தப்படத்தினை திரையிடுவதற்கு மத்திய அரசு தடை விதித்தது. இதனை எதிர்த்து மூத்த பத்திரிக்கையாளர் என்.ராம், வழக்கறிஞர் பிரசாந்த் பூசன், திரிணாமூல் காங்கிரஸ் எம்பி மஹூவா மொய்த்ரா ஆகியோர் சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல வழக்கு தாக்கல் செய்திருந்தனர். அதேபோல் இந்த தடை உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்று மூத்த வழக்கறிஞர் பி.எல்.சர்மாவும் மனுதாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுக்களை விசாரித்த நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா, எம் எம் சுந்தரேஷ் அடங்கிய அமர்வு, "இந்த மனுக்களுக்கு மூன்று வார காலத்திற்குள் மத்திய அரசு பதில் அளிக்க வேண்டும் என்று நோட்டீஸ் அனுப்பியுள்ளது. மேலும் இந்த ஆவணப்படத்தின் தடைக்கான உண்மையான ஆவணங்களையும் தாக்கல் செய்யுமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து நீதிபதிகள் அமர்வு, "நாங்கள் நோட்டீஸ் அனுப்புகிறோம். அதற்கு மூன்று வாராங்களுக்குள் பதில் அளிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து இரண்டு வாரங்களில் வழக்கில் இணைந்து கொள்ளுங்கள் என்று தெரிவித்தனர். இந்த வழக்குகளின் மறுவிசாரணை ஏப்ரல் மாதத்திற்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

முன்னதாக, மத்திய அரசு ஜனவரி 21 ஆம் தேதி, தகவல் தொழில்நுட்ப விதிகள் 2021-ன் கீழ், அவசரகால வழிமுறைகளை பின்பற்றி, பி.பி.சி. ஆவணப்படத்தின் இணைப்புகளை யூடியூப், ட்விட்டர் தளங்களில் இருந்து நீக்க உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# குமரி கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு வலுவிழக்கும்

### வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, பிப். 04-

குமரிக்கடல் பகுதியில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவிழக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நேற்று முன்தினம் (பிப்..2) குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மன்னார் வளைகுடா பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியானது நேற்று (பிப்..3) தென்மேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 12 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவிழக்கக்கூடும்.

இதன் காரணமாக, இன்று (பிப்.4ம் தேதி) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடிமின்னலுடன் கூடிய லேசான மற்றும் மிதமான மழை பெய்யக்கூடும். 5ஆம் தேதி முதல் 7ஆம் தேதி வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 31 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும்.


மீனவர்களுக்கான எச்சரிக்கை: இன்று 4ம் தேதி குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| 909.64 | 243.65 |
| பாயின்ட் 60841.88 | பாயின்ட் 17854.05 |



**தங்கம்**
1 சவரன் ₹44,040
1 கிராம் ₹5,505



**வெள்ளி**
1 கிலோ ₹77,800
1 கிராம் ₹77.80

**டாலர்** ₹82.13

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

# அமெரிக்காவில் இந்திய வம்சாவளி எம்.பி.க்கள் 4 பேருக்கு முக்கிய பதவி

**வாஷிங்டன், பிப். 04-**

அமெரிக்காவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 4 எம்.பி.க்களுக்கு முக்கிய பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த எம்.பி.க்கள், ராஜா கிருஷ்ணமூர்த்தி, அமி பெரா, பிரமிளா ஜெயபால், ரோகன்னா ஆகியோர் ஆவர். இவர்கள் 4 பேரும் அதிபர் ஜோ பைடனின் ஜனநாயக கட்சியை சேர்ந்தவர்கள் ஆவார்கள்.



ராஜா கிருஷ்ணமூர்த்தி, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் சபையின் சீனாவுக்கான ரேங்கிங் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். அமி பெரா, முக்கியத்துவம் வாய்ந்த பிரதிநிதிகள் சபையின் புலனாய்வு குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். பிரமிளா ஜெயபால், பிரதிநிதிகள் சபையின் நீதித்துறை குழுவின் ரேங்கிங் உறுப்பினராக (குடியேற்றம்) நியமிக்கப்பட்டுள்ளார். ரோகன்னா, சீன கம்யூனிஸ்டு கட்சியுடனான அமெரிக்காவின் பொருளாதாரம், தொழில்நுட்பம், பாதுகாப்பு போட்டி தொடர்பான புதிய குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய வம்சாவளி எம்.பி.க்கள் 4 பேர், அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையில் முக்கிய குழுக்களில் நியமிக்கப்பட்டிருப்பது அந்த நாட்டின் அரசியலில் இந்திய வம்சாவளிகள் அடைந்து வருகிற செல்வாக்கை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

## அபுதாபியில் இருந்து புறப்பட்ட விமானத்தில் நடுவானில் தீ

**அபுதாபி, பிப். 04-**

அபுதாபியில் இருந்து கோழிக்கோடு நோக்கி புறப்பட ஏர் இந்தியா விமானத்தின் இன்ஜின் எண் 1-ல் (இடது இன்ஜின்) நடுவானில் தீப்பிடித்தது. இதனால் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டு உடனடியாக பயணிகள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.

கோழிக்கோடு செல்லும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் B737-800 விமானம் அபுதாபி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட பிறகு 1000 அடி உயரத்தில் அதன் இன்ஜின் பகுதியில் தீப்பிடித்தது. இதையடுத்து விமானத்தில் முழு அவசரநிலை அறிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து விமானம் பாதுகாப்பாக அவசர தரையிறக்கம் செய்யப்பட்டடு அனைத்து பயணிகளும் வெளியேற்றப்பட்டனர். ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் B737-800 விமானம் VT-AYC இயக்க விமானம் IX 348 நடுவானில் 1000 அடியில் காற்றின் திசை மாறுபாடு காரணமாக இன்ஜின் எண் 1-ல் வெடிப்பு ஏற்பட்டதாக சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

# சென்னை அண்ணா நினைவிடத்தில் எடப்பாடி பழனிசாமி மரியாதை



**சென்னை, பிப். 04-**

பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளையொட்டி சென்னையில் உள்ள அவரது நினைவிடத்தில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி மரியாதை செலுத்தினார்.

பேரறிஞர் அண்ணாவின் 54-வது நினைவு நாளையொட்டி முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி நேற்று காலையில் அவரது வீட்டில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அண்ணாவின் உருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

அதன் பிறகு சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அண்ணாவின் நினைவிடத்துக்கு சென்று மலர் வளையம் வைத்து வணங்கினார். அவருடன் முன்னாள் அமைச்சர்கள் ஜெயக்குமார், நத்தம் விசுவநாதன், பொன்னையன், பெஞ்சமின், பா.வளர்மதி, கோகுல இந்திரா, மாவட்ட செயலாளர்கள் ராஜேஷ், சத்யா, வேளச்சேரி அசோக், ஆதிராஜாராம், பாலகங்கா, வெங்கடேஷ்பாபு, மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் பரங்கிமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரும்பாக்கம் ராஜசேகர், எம்.ஜி.ஆர். இளைஞரணி மாநில துணை செயலாளர் துரைப்பாக்கம் டி.ஜி.கோவிந்தசாமி, முன்னாள் எம்.பி. ஜெயவரதன், வட சென்னை வழக்கறிஞர் ராயபுரம் பாலாஜி, முன்னாள் கவுன்சிலர் சின்னையன் என்ற ஆறுமுகம், எம்.ஜி.ஆர். இளைஞரணி இணை செயலாளர் டாக்டர் வி.சுனில், மாணவரணி துணை செயலாளர் வக்கீல் ஆ.பழனி, முகப்பேர் இளஞ்செழியன், வடபழனி மின்சார சத்ய நாராயமூர்த்தி, ராமலிங்கம் உள்பட ஏராளமான கட்சி நிர்வாகிகள் பங்கேற்று மரியாதை செலுத்தினார்கள்.

### நாஜி படைகளை தடுத்து நிறுத்தி

# வீரமரணம் அடைந்த ரஷ்ய தளபதியின் நினைவிடத்தில் அதிபர் புடின் அஞ்சலி

**மாஸ்கோ, பிப். 04-**

நாஜி படைகளை தடுத்து நிறுத்தி, வீரமரணம் அடைந்த ரஷ்ய தளபதியின் நினைவிடத்தில், மலர் வளையம் வைத்து ரஷ்ய அதிபர் புடின் மவுன அஞ்சலி செலுத்தினார்.

இரண்டாம் உலகப் போரில், ஹிட்லரின் நாஜி படைகளை, சோவியத் ராணுவம் வீழ்த்தி வாகை சூடியதன் 80-ம் ஆண்டு விழாவினை முன்னிட்டு ரஷ்யாவின் வோல்கோகிராட் நகரில் கண்கவர் வாணவேடிக்கைகள் நிகழ்த்தப்பட்டன.

இரண்டாம் உலகப் போரின் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்த ஸ்டாலின்கிராட் போரில், 10 லட்சத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது. ரஷ்ய தளபதி ஸ்டாலின் இறந்த பிறகு இந்த நகருக்கு ‘வோல்கோ கிராட்’ என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இந்நிலையில் நாஜி படைகளை தடுத்து நிறுத்தி, வீரமரணம் அடைந்த ரஷ்ய தளபதியின் நினைவிடத்தில், மலர் வளையம் வைத்து ரஷ்ய அதிபர் புடின் மவுன அஞ்சலி செலுத்தினார்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 1474 கன அடியாக அதிகரிப்பு

**சேலம், பிப். 04-**

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்ததால் மீண்டும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் 1304 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை வினாடிக்கு 1474 கன அடியாக அதிகரித்தது. இதையடுத்து அணையில் இருந்து காவிரியில் ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

அணைக்கு வரும் தண்ணீரை விட அணையில் இருந்து குறைந்த அளவே தண்ணீர் திறந்து விடப்படுவதால் அணை நீர்மட்டம் அப்படியே நீடிக்கிறது.

நேற்று முன்தினம் 103.71 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று 103.72 அடியாக உள்ளது. இனி வரும் நாட்களில் நீர்வரத்து அதிகரித்தால் அணையின் நீர்மட்டம் மீண்டும் உயர வாய்ப்புள்ளது.

# சித்த மருத்துவ படிப்புக்கான 2-ம் கட்ட கலந்தாய்வு வரும் 11-ம் தேதி நடக்கிறது

**சென்னை, பிப். 04-**

வரும் 11-ம் தேதி சித்த மருத்துவ படிப்புகளுக்கான 2-ம் கட்ட கலந்தாய்வு நடைபெற உள்ளதாக இந்திய மருத்துவ மற்றும் ஓமியோபதி துறை தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி ஆகிய ஆயுஷ் படிப்புகளுக்கு 5 அரசு கல்லூரிகள் உள்ளன. அதில் உள்ள 330 இடங்களில் அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு 50 இடங்கள் வழங்கப்படுகிறது. அதேபோல, 26 தனியார் கல்லூரிகளில் 1,990 இடங்கள் உள்ளன. இதில் 1,469 இடங்கள் அரசு ஒதுக்கீட்டுக்கும், 521 இடங்கள் நிர்வாக ஒதுக்கீட்டுக்கும் உள்ளன.

இந்த கல்வி ஆண்டில் அரசு ஒதுக்கீடு, நிர்வாக ஒதுக்கீடு, தனியார் கல்லூரிகளின் அகில இந்திய ஒதுக்கீடு ஆகிய இடங்களுக்கான மாணவர் சேர்க்கையை மாநில அரசு நடத்தியது. முதல்கட்ட கலந்தாய்வு முடிந்த நிலையில், அரசு கல்லூரிகளில் 61 இடங்கள் காலியாக உள்ளன. மேலும், சுயநிதி கல்லூரிகளில் 350 அரசு ஒதுக்கீட்டு இடங்கள், 127 அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் 503 நிர்வாக ஒதுக்கீடு என மொத்தம் 1,041 இடங்கள் நிரம்பாமல் காலியாக உள்ளன.

இந்த இடங்களுக்கான 2-ம் கட்ட கலந்தாய்வு வரும் 11-ம் தேதி சென்னை அரும்பாக்கம் சித்த மருத்துவமனை வளாகத்தில் நடைபெற உள்ளது. இந்த கலந்தாய்வில், காத்திருப்போர் பட்டியலில் உள்ளோர் பங்கேற்கலாம். மேலும், நீட் தேர்வு எழுதிய மாணவர்கள் 15-ம் தேதி சான்றிதழ்களுடன் நேரடியாக வந்து கலந்தாய்வில் பங்கேற்று இடங்களை தேர்வு செய்யலாம்.

மேலும் விவரங்களை https://tnhealth.tn.gov.in/ என்ற இணையதள பக்கத்தில் அறிந்து கொள்ளலாம் என இந்திய மருத்துவ மற்றும் ஓமியோபதி துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கொலீஜியம் பரிந்துரைத்த 5 நீதிபதிகள் விரைவில் நியமனம்

### சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு பதில்

**புதுடெல்லி, பிப். 04-**


நீதிபதிகள் நியமனத்தில் ஏற்படும் தாமதம் குறித்த வழக்கு நேற்று (வெள்ளிக்கிழமை) சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. இதனை, நீதிபதிகள் கவுல் மற்றும் ஏ.எஸ் ஓகா அடங்கிய அமர்வு விசாரித்தது. அப்போது, அட்டர்னி ஜெனரல் ஆர். வெங்கடரமணி, சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளாக கொலீஜியம் பரிந்துரைத்த 5 நீதிபதிகள் விரைவில் நியமனம் செய்யப்படுவார்கள் என்றார்.

கொலீஜியம் பரிந்துரைக்கும் நீதிபதிகளை நியமனம் செய்வதில் மத்திய அரசின் தாமதம் குறித்து அதிருப்தியை வெளியப்படுத்திய நீதிபதிகள் அமர்வு, இது மிகவும் முக்கியமான பிரச்சினை. மிகவும் சங்கடமான நிலைப்பாட்டை எடுக்க எங்களை நிர்பந்திக்க வேண்டாம் என்று தெரிவித்தனர்.

முன்னதாக, கொலீஜியம் கடந்த 2022ம் ஆண்டு டிச.13ஆம் தேதி, ராஜஸ்தான் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பங்கஜ் மிதல், பாட்னா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சய் கரோல், மணிப்பூர் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பி.வி.சஞ்சய் குமார், பாட்னா உயர் நீதிமன்ற நீதிபதி அஷானுத்தின் அமனுல்லா, அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி மனோஜ் மிஸ்ரா ஆகிய ஐந்து நீதிபதிகளின் பெயர்களை சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளாக பரிந்துரை செய்திருந்தது.

இவர்கள் ஐந்து பேரும் நீதிபதிகளாக பதவி ஏற்கும் பட்சத்தில் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளின் எண்ணிக்கை 32 ஆக உயரும். தலைமை நீதிபதி உட்பட சுப்ரீம் கோர்ட்டில் மொத்தம் 34 நீதிபதிகள் இருக்க வேண்டும். தற்போது 27 நீதிபதிகளே உள்ளனர்.

**04-02-2023**




**மேஷம்:-** பொருள் இழப்பை தவிர்க்க எச்சரிக்கையுடன் இருக்கவும். சந்தேக உணர்வு, பயம் அதிகரிக்கும். வியாபாரப் பயணங்களில் எதிர்பார்த்த வருமானம் இருக்காது. பிடிக்காத உறவுகள் சந்திப்பதில் மகிழ்ச்சி ஏற்படும்.

**ரிஷபம்:-** சகோதரர்களால் இலாபம் ஏற்படும். பிறருக்கு உதவும் தியாக மனப்பான்மையைக் விடுவது நல்லது. பெண்களின் அன்றாட வாழ்க்கையில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது.

**மிதுனம்:-** தொழிலில் எதிர்பார்த்த இலாப வரவின்றி பணமுடை ஏற்படலாம். கல்வியில் முன்னேற்றத் தடைகள் ஏற்படலாம். சமாளிக்க முடியாத செலவுகள் ஏற்பட்டாலும் சரி கட்டிவிடுவார்கள்.

**கடகம்:-** தனவரவு அதிகரிக்கும். பெற்றோர்களால் நன்மை பெறுவீர்கள். ஆராய்ச்சி மனப்பான்மையோடு செயல்படுவீர்கள். கடல் கடந்த விவகாரங்கள் வெற்றி அளிக்கும்.

**சிம்மம்:-** உங்கள் மனையாள் இனிய மாற்றங்களை விரும்புவார். அதனால், ஏற்படும் வீண் செலவுகள் பணமுடை ஏற்படலாம். சிலருக்கு உடலிலும், மனதிலும் ஒரு நிலையற்ற தன்மை நிலவும்.

**கன்னி:-** திருமணம், நண்பர்கள் சந்திப்பு, ஆசைகள் நிறைவேறும், சுவையான உணவு என அனைத்துமே சுகமாக அமையும். இன்று, கற்பனை உலகிலேயே பயணிப்பீர்கள். வியாபாரத்தில் நல்ல ஆதாயங்களை அடைவீர்கள்.

**துலாம்:-** தொழில், வியாபாரம் மூலம் அதிக இலாபம் அடைவீர்கள். உங்கள் புதிய சாதனையால் வீட்டில் உங்கள் மதிப்பு உயரும். புதிய பெண் தோழியின் நட்பால் உள்ளம் மகிழும்.

**விருச்சிகம்:-** ஆரோக்கிய நிலை சீராக இருக்கும். ஏதாவது ஒரு நினைவில் மனம் உழல்வாதல், தெய்வ சந்நிதியில் அமைதி தேடலாம். பயண ஆர்வமும், சூழ்நிலை மாற்றத்தையும் விரும்புவீர்கள்.

**தனுசு:-** நிம்மதியற்ற தன்மையால் மனக் குழப்பங்கள் அதிகரிக்கும். சிலருக்கு பண இழப்புக்கள் ஏற்படலாம். கோபத்தால் சண்டை, சச்சரவுகள் ஏற்படும். சந்தோஷம் குறையும்.

**மகரம்:-** காதல் உணர்வு தலை தூக்கும். அரசியல் மற்றும் பொது வாழ்க்கையில் ஆதாயம் அடையலாம். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். குழந்தைகளுக்கு அதிர்ஷ்டமான நாள்.

**கும்பம்:-** தனவரவு கூடும். நண்பேண்டா – என நண்பர்கள் ஓடிவந்து உதவுவர். சுகமான இனிய பயணங்கள் மகிழ்ச்சி அளிக்கும். பெயரும் புகழும் கூடும். சொந்த வீடு அமையும்.

**மீனம்:-** குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. காரிய வெற்றி எட்டா கனியாகும். காரியங்களில், பயணங்களில் தடைகள் ஏற்படும். அஜீரணம் ஏற்படும்.

# எடப்பாடி - பன்னீர் செல்வத்துடன் அண்ணாமலை அடுத்தடுத்து சந்திப்பு

**சென்னை, பிப். 04-**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் இருவரும் தனித்தனியாக வேட்பாளர்களை அறிவித்துள்ளனர். இந்த நிலையில் பா.ஜ.க. தலைவர்கள் சி.டி.ரவி, அண்ணாமலை மற்றும் கரு.நாகராஜன் ஆகியோர் நேற்று சமரச முயற்சியில் ஈடுபட்டனர்.

முதலில் அவர்கள் அடையாறு கிரீன்வேஸ் சாலையில் உள்ள எடப்பாடி பழனிசாமியின் வீட்டுக்கு காலை 8.15 மணிக்கு சென்றனர். எடப்பாடி பழனிசாமிக்கு பூங்கொத்து கொடுத்து பொன்னாடை அணிவித்தனர். பதிலுக்கு அவரும் பொன்னாடை அணிவித்து மரியாதை செய்தார். இந்த சந்திப்பின் போது அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரும் உடன் இருந்தார். அவர்கள் சுமார் ஒரு மணி நேரம் ஆலோசனை நடத்தினர். இந்த சந்திப்பின் போது எடப்பாடி பழனிசாமி தன் நிலைப்பாட்டை உறுதிபட தெரிவித்ததாக கூறப்படுகிறது.

அதை தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்ட பா.ஜ.க. தலைவர்கள் பின்னர் ஓ.பன்னீர்செல்வத்தின் வீட்டுக்கு சென்று அவரை சந்தித்து பேசினர். இந்த சந்திப்பின் போது வைத்திலிங்கம், ஜே.சி.டி.பிரபாகர், கரு.நாகராஜன் ஆகியோர் உடனிருந்தனர். இந்த சந்திப்பும் சுமார் 1 மணி நேரம் நீடித்தது. ஓ.பன்னீர்செல்வத்துடன் ஆலோசனை முடிந்ததும் பா.ஜ.க. தலைவர்கள் தி.நகரில் உள்ள பா.ஜ.க. தலைமையகமான கமலாலயத்துக்கு சென்று அங்கும் ஆலோசனை மேற்கொண்டனர்.

# ஆறு நாட்களில் அதானி குழுமம் இழந்த தொகை ரூ.9 லட்சம் கோடி

**புதுடெல்லி, பிப். 04-**

கடந்த 6 நாட்களில் மட்டும் அதானி எண்டர்பிரைசஸ் நிறுவனம் 26.5 சதவீதம் இழப்பை சந்தித்துள்ளது. சுமார் ரூ.9 லட்சம் கோடியாம்.

அதானி குழுமம் மீது அமெரிக்காவின் ஆய்வு நிறுவனமான ஹிண்டன்பர்க் பல்வேறு மோசடி குற்றச்சாட்டுகளை கூறியது. இதைத்தொடர்ந்து அதானி குழுமத்தின் பங்குகள் கடந்த சில நாட்களாக தொடர்ந்து சரிவை சந்தித்து வருகின்றன. இதன் காரணமாக அதானியின் சொத்து மதிப்பும், கடும் சரிவை சந்தித்தது.

கடந்த 24-ம் தேதி வரை உலக பணக்கார பட்டியலில் 3-வது இடத்தில் இருந்த கவுதம் அதானி தற்போது முதல் 10 இடங்களில் இருந்து வெளியேறியது மட்டுமல்லாமல் முகேஷ்அம்பானிக்கு பின் சென்று விட்டார். இதன் மூலம் கவுதம்அதானி ஆசியாவின் பெரும் பணக்காரர் என்ற நிலையையும் இழந்துள்ளார்.

இந்நிலையில் அதானி எண்டர்பிரைசஸ் நிறுவனம், எப்.பி.ஓ. பங்குகள் மூலம் ரூ.20 ஆயிரம் கோடி திரட்டும் திட்டத்தையும் ரத்து செய்தது. இதுஒரு புறம் இருக்க, பங்குச்சந்தைகளில் அதானி குழும பங்குகள் தொடர்ந்து சரிவை சந்தித்து வருகிறது. அந்த வகையில் 6 நாட்களில் மட்டும் ரூ.9 லட்சம் கோடி (100 பில்லியன் டாலர்) அளவுக்கு இழப்பை சந்தித்துள்ளது.

அதாவது கடந்த 6 நாட்களில் மட்டும் அதானி எண்டர்பிரைசஸ் நிறுவனம் 26.5 சதவீதம் இழப்பை சந்தித்துள்ளது. அதானி டோடல் கேஸ் நிறுவனம் 10 சதவீதம், அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் 10 சதவீதம், அதானி துறைமுகங்கள் 6.1 சதவீதம், அதானி டிரான்ஸ்மிஷன் நிறுவனம் 10 சதவீதம், என்.டி.டி.வி. பங்குகள் 5 சதவீதம், அதானி பவர் 5 சதவீதம், அதானி வில்மர் 22.4 சதவீதம் சரிவை சந்தித்துள்ளன. ஏ.சி.சி. லிமிடெட் 0.1 சதவீதமும், அம்புஜா சிமெண்ட்ஸ் 5.3 சதவீதமும் உயர்ந்துள்ளது.

இதன் மூலம் அதானி குழுமத்தில் 10 நிறுவனங்கள், 8 நிறுவனங்கள் பெரும் சரிவை சந்தித்திருப்பது தெரியவந்துள்ளது. இதற்கிடையே அதானி குழுமத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள் குறித்த விபரங்களை தெரிவிக்குமாறு வங்கிகளிடம் பாரத ரிசர்வ் வங்கி கேட்டுள்ளது. வங்கிகளிடம் இருந்து அதானி குழும நிறுவனங்கள் ஒட்டுமொத்தமாக ரூ.2.1 லட்சம் கோடி கடன் பெற்றுள்ளன. இவற்றின் இந்திய வங்கிகள் வழங்கிய கடன் மட்டும் சுமார் 40 சதவீதம் என கூறப்படுகிறது.

இந்திய வங்கிகளில் பொதுத்துறை வங்கிகளே அதானி குழுமத்திற்கு 90 சதவீதத்திற்கு அதிகமான கடன்களை வழங்கி உள்ளதாக கூறப்படுகிறது. இதில் பாரத ஸ்டேட் வங்கி ரூ.22 ஆயிரம் கோடியையும், பஞ்சாப் நேஷனல் வங்கி ரூ.7 ஆயிரம் கோடியையும், பரோடா வங்கி ரூ.7 ஆயிரம் கோடியையும் அதானி குழும நிறுவனங்களுக்கு வழங்கி உள்ளதாக தெரிவித்துள்ளனர். மற்ற வங்கிகள் கடன் விபரங்களை வெளியிடவில்லை.

இந்நிலையில் தான் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வங்கிகள் அதானி குழுமங்களுக்கு வழங்கிய கடன் விபரங்கள் குறித்த தகவல்களை தெரிவிக்குமாறு பாரத ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது.

# சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவின்படி அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டப்படும்

### டெல்லியில் சி.வி.சண்முகம் பேட்டி

**புதுடெல்லி, பிப். 04-**

சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவின்படி அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டப்படும் என சி.வி.சண்முகம் தெரிவித்துள்ளார்.

ஓ.பி.எஸ் தரப்பையும் உள்ளடக்கிய பொதுக்குழு கூட்டத்தை கூட்டி, வேட்பாளர் தேர்வு உள்ளிட்ட முடிவுகளை எடுக்கலாம் என அ.தி.மு.க. பொதுக்குழு வழக்கில் சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவை அடுத்து டெல்லியில் அ.தி.மு.க. எம்.பி. சி.வி.சண்முகம் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது; சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவின்படி அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டப்படும். நல்ல நோக்கத்திற்காக சுப்ரீம் கோர்ட் இந்த உத்தரவை வழங்கியுள்ளது.

விரைவில் பொதுக்குழுவை கூட்டுவதற்கான அறிவிப்பை அவைத்தலைவர் தமிழ்மகன் உசைன் வெளியிடுவார். இருதரப்பும் கையெழுத்து போடுவது சாத்தியமில்லாதது. அ.தி.மு.க.வில் பெரும்பாலான உறுப்பினர்கள் யார் பக்கம் உள்ளனர் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. பெரும்பாலான பொதுக்குழு உறுப்பினர்களின் ஆதரவு பெற்ற நபரே வேட்பாளராக இருப்பர். அ.தி.மு.க. இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவு என்பது இடைத்தேர்தலுக்கு மட்டுமான உத்தரவு என நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

விண்ணப்பத்தில் இருவரும் கையெழுத்திடுவது நடக்காத காரியம் என வாதிட்டோம். அ.தி.மு.க. வேட்பாளரை பொதுக்குழு முடிவெடுக்கட்டும் என நீதிபதிகள் யோசனை தெரிவித்தனர் இவ்வாறு கூறினார்.

# ராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆட்சியர்கள் பணியிட மாற்றம்

**சென்னை, பிப். 04-**

ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர்களை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசின் தலைமைச் செயலாளர் உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, சமூக பாதுகாப்புத் துறை இயக்குநர் வளர்மதி ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் பாஸ்கர பாண்டியன் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அமர் குஷ்வாஹா சமூக பாதுகாப்பு துறை இயக்குநராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# ஒப்பந்த செவிலியர்களுக்கு நிரந்தரப் பணி ஆணைகள்

## முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, பிப். 04-**

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 570 ஒப்பந்த செவிலியர்களுக்கு நிரந்தரப் பணி ஆணைகள் மற்றும் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் 177 இருட்டறை உதவியாளர்கள் மற்றும் 19 ஆய்வக நுட்புநர் நிலை-II பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள், இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு கருணை அடிப்படையில் 21 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் என மொத்தம் 787 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 ஒப்பந்த செவிலியர்கள், 5 இருட்டறை உதவியாளர்கள், 3 ஆய்வக நுட்புநர் நிலை-II மற்றும் 4 இளநிலை உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகத்தின் கீழ் இயங்கும் அரசு மருத்துவமனைகளில் காலியாகவுள்ள பணியிடங்களுக்கு 570 ஒப்பந்த செவிலியர்களுக்கு கலந்தாய்வு முடிந்து நிரந்தர பணி ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதல்வர் 5 ஒப்பந்த செவிலியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகத்திற்கு 92 இருட்டறை உதவியாளர்கள் மற்றும் மருத்துவக் கல்வி இயக்குநரகத்திற்கு 85 இருட்டறை உதவியாளர்கள், என 177 இருட்டறை உதவியாளர்கள் காலிப் பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 இருட்டறை உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் வழங்கினார்.

உணவு பாதுகாப்பு துறையின் கட்டுப்பாட்டில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம், தஞ்சாவூர் ஆகிய 6 இடங்களில் உள்ள உணவு பகுப்பாய்வகங்களில் காலியாகவுள்ள 19 ஆய்வக நுட்புநர் நிலை-II பணியிடங்களுக்கு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 3 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் வழங்கினார்.

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குரகம் மற்றும் மருத்துவக் கல்வி இயக்குநரகத்தில் பணி புரிந்து பணிக்காலத்தில் காலமான 21 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 4 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் வழங்கினார்.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில்

# விஜய் 67 படத்தின் பெயர் 'லியோ'

**சென்னை, பிப். 04-**

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜயின் 67வது படத்திற்கு லியோ என பெயரிடப்பட்டுள்ளது

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகி வரும் படம் தளபதி 67. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரிக்க, அனிருத் இசையமைக்கவுள்ளார். மாஸ்டர் படத்தின் வெற்றிக்கு பின்னர் விஜய்யும், லோகேஷும் மீண்டும் இணைந்துள்ளதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

தளபதி 67 படத்தில் நடிகை திரிஷா, நடிகர் அர்ஜுன், பாலிவுட் நடிகர் சஞ்சய் தத், நடிகை பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், இயக்குனர்கள் மிஸ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், டான்ஸ் மாஸ்டர் சாண்டி, மலையாள நடிகர் மேத்யூ தாமஸ் ஆகியோர் நடிக்க உள்ளதாக படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்து உள்ளது. இந்த நிலையில் இந்தப் படத்தின் டிஜிட்டல் உரிமத்தை நெட்பிளிக்ஸ் நிறுவனமும், சாட்டிலைட் உரிமத்தை சன் டிவியும் பெற்றுள்ளது. இதனை தயாரிப்பு நிறுவனம் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளது.

தளபதி 67 படத்தின் டைட்டில் நேற்று மாலை 5 மணிக்கு அதிரடியாக வெளியாக உள்ளதாக கூறப்பட்ட நிலையில், நேற்று வெளியான விஜய்யின் போஸ்டரை பார்த்த ரசிகர்கள் ராயல், ஈகிள், கேங் என ஏகப்பட்ட டைட்டில்களையும் பதிவிட்டு இதில் ஏதாவது ஒன்று தான் இருக்கும் என கூறி வந்தனர். இந்த நிலையில் விஜய்யின் புதிய படத்தின் பெயர் லியோ என பெயரிடப்பட்டு உள்ளதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.* லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜயின் 67வது படத்திற்கு லியோ என பெயரிடப்பட்டுள்ளது. லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜயின் 67வது படத்திற்கு லியோ என பெயரிடப்பட்டுள்ளது தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய 4 மொழிகளில் அக்டோபர் 19ந்தேதி ரிலீஸ் ஆக உள்ளது.

பெங்களுருவில் இந்திய எரிசக்தி வாரத்தை

# பிப். 6-ல் தொடங்கி வைக்கிறார் பிரதமர்

**பெங்களூரு, பிப். 04-**

பெங்களூரு துமக்கூருவில் நடக்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி, பிப்ரவரி 6-ம் தேதி கர்நாடகா வருகிறார்.

சட்டசபை தேர்தலை ஒட்டி, பிரதமர் நரேந்திர மோடி கர்நாடகா வருகிறார். மத்திய, மாநில அரசு திட்டங்களை துவக்கி வைக்கிறார். பிப்ரவரி 6-ம் தேதி மீண்டும் கர்நாடகா வருகிறார். அன்றைய தினம் காலை மாதவாரவுக்கு அருகிலுள்ள பெங்களூரு சர்வதேச கண்காட்சி மையத்தில் இந்திய எரிசக்தி வாரத்தை பிரதமர் துவக்கி வைக்கிறார்.

பெங்களூருவில் இந்திய எரிசக்தி வாரத்தை பிப்ரவரி 6-ம் தேதி பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார். இதில் 650க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள், உலகம் முழுவதும் இருந்து 34 அமைச்சர்கள் பங்கேற்கின்றனர். இதுபோன்ற நிகழ்வை இந்தியா நடத்துவது இதுவே முதல் முறையாகும். இது போன்ற உயர்மட்ட எரிசக்தி நிறுவனங்களின் சிஇஓக்கள் பங்கேற்று சாதனை படைத்துள்ளனர். பிரதமர் மோடி முழுமையான கூட்டத்தில் கலந்து கொள்வார் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரிகளுடன் வட்ட மேசை சந்திப்பை நடத்துவார் என தகவல் தெரிவித்துள்ளனர்.

இந்திய எரிசக்தி வாரத்தில், மில்லியன் பிளாஸ்டிக் பெட் பாட்டில்களை மறுசுழற்சி செய்வதன் மூலம் துணிகளை உற்பத்தி செய்தல், 2025க்குள் E20 எனப்படும் முன்முயற்சியின் கீழ் எத்தனால் கலவையை 20 சதவீதமாக விரைவுபடுத்துவது உள்ளிட்ட பெரிய ஆற்றல் முயற்சிகளை பிரதமர் வெளியிடுகிறார். பச்சை ஹைட்ரஜன் இயக்கம் பேரணியையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

பிற்பகலில் தும்கூரு மாவட்டம், குப்பி தாலுகா, பிதரஹள்ளி காவல் கிராமத்தில் எச்.ஏ.எல்., தொழிற்சாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிகாப்டர் தொழிற்சாலையை திறந்து வைத்து நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். அதே இடத்தில் இருந்து, விடியோ கான்பரன்ஸ் வாயிலாக, சிக்கநாயக்கனஹள்ளி, திப்டூரில் ஜல் ஜீவன் மிஷன் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். அன்றே, பெங்களூரில் இருந்து டில்லி புறப்படுகிறார் என்று தகவல் அளித்துள்ளனர்.

# சிலம்பம் சுற்றிய அமைச்சர்: வியந்து பார்த்த அதிகாரிகள்



**நெல்லை, பிப். 04-**

நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை தமிழக தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் துவக்கி வைத்து சிலம்பம் விளையாடி அசத்தினார்.

அண்ணாவின் 54-வது நினைவு தினம் நேற்று கடைபிடிக்கப்பட்டது. இதையொட்டி தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் உள்ள விளையாட்டு மையங்களில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள் நடந்து வருகின்றன.

இந்நிலையில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கில் இந்த போட்டியினை துவக்கி வைப்பதற்காக அமைச்சர் மனோ தங்கராஜ் நேற்று அண்ணா விளையாட்டு அரங்கம் சென்றார்.

போட்டிகளை துவக்கி வைக்கும் முன்னர் அவர் ஏற்கனவே சிலம்பக் கலையில் அதிகம் ஈடுபாடு உள்ளவர் என்பதால் மைதானத்தில் சிலம்பம் சுற்றி பார்வையாளர்களை அசத்தினார். இதனை அடுத்து பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை அவர் துவக்கி வைத்தார். அவர் சிலம்பம் சுற்றுவதை பார்த்த பள்ளி மாணவ, மாணவர்களிடையே உற்சாகத்தையும் வியப்பையும் ஏற்படுத்தியது.

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்: அ.ம.மு.க. வேட்பாளர் வேட்புமனு தாக்கல்

**ஈரோடு, பிப். 04-**

ஈரோடு கிழக்கு தொகுதியில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சிவபிரசாந்த், ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் க.சிவகுமாரிடம் நேற்று(பிப்.3) வேட்புமனு தாக்கல் செய்தார். முன்னதாக, ஈரோட்டில் அ.ம.மு.க. சார்பில், அமைக்கப்பட்டுள்ள தேர்தல் பணிமனையை திறந்து வைத்த அக்கட்சியின் தேர்தல் ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் அமைச்சருமான சண்முகவேலு பேசியதாவது, "எங்கள் வேட்பாளர் சிவபிரசாந்த் பொறியியல் பட்டதாரி. கட்சியின் மாவட்ட மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளராக உள்ளார். 29 வயது இளைஞரான சிவபிரசாந்த் வெற்றி பெற்றால் மக்களுக்கு திறம்பட சேவை செய்வார். பணம் மற்றும் அதிகார பலத்தைப் பயன்படுத்தி, இடைத்தேர்தலில் திமுக கூட்டணி வெற்றியை பெற நினைக்கிறது.

போராட்டம் நடத்துவோம்: தேர்தல் ஆணையம் அதிக பார்வையாளர்கள் மற்றும் மத்தியப் படைகளை நியமித்து பணபலத்தையும், ஆள்பலத்தையும் தடுக்கவில்லை என்றால், அ.ம.மு.க. மிகப்பெரிய போராட்டத்தை நடத்தும். எங்களுக்கும் அதிமுகவிற்கும் தொடர்பில்லை. அ.ம.மு.க. ஒரு தனி அமைப்பாகவே செயல்படுகிறது.

திமுகவை தோற்கடிக்க அனைத்து ஜெயலலிதா ஆதரவாளர்களையும் ஒன்றிணைக்க வேண்டும் என்று எங்கள் தலைவர் டிடிவி தினகரன் விரும்பினார். ஆனால், அதை இபிஎஸ் ஏற்கவில்லை. ஈரோடு கிழக்கு தொகுதியில் வரும் 12-ம் தேதி டிடிவி தினகரன் பிரச்சாரம் செய்யவுள்ளார்" என்றார்.

# பிரபல திரைப்பட இயக்குநர் கே. விஸ்வநாத் மறைவு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

**சென்னை, பிப். 04-**

இந்தியத் திரையுலகின் மூத்த இயக்குனர்களுள் ஒருவர் கே.விஸ்வநாத் (92). வயது மூப்பால் கடந்த சில காலமாகவே சினிமாவில் இருந்து விலகி ஐதராபாத்தில் தனது குடும்பத்துடன் ஓய்வெடுத்து வந்தார்.

இந்த நிலையில் ஐதராபாத் உள்ள தனது இல்லத்தில் கே.விஸ்வநாத் நேற்று முன்தினம் நள்ளிரவில் காலமானார். அவரது மறைவுக்கு இந்திய திரையுலகினர் உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் பிரபல இயக்குனர் கே. விஸ்வநாத் மறைவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

காலத்தால் அழியாத திரைக்காவியங்கள் மூலமாக இந்திய அளவில் மக்கள் மனமெங்கும் நிறைந்துள்ள மகா கலைஞர் இயக்குநர் கலாதபஸ்வி விஸ்வநாத்தின் மறைவு மிகுந்த வேதனையையும், அதிர்ச்சியையும் அளிக்கிறது.

சங்கராபரணம், சலங்கை ஒலி உள்ளிட்ட இசையை அடிநாதமாக கொண்ட காவியங்களை திரையில் வடித்த கலைச் சிற்பியான கே. விஸ்வநாத், நாட்டின் மிக உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருதுடன், 5 தேசிய விருதுகள், 7 நந்தி விருதுகள், 10 பிலிம்பேர் விருதுகள், ஆந்திரப் பிரதேச மாநில அரசின் விருது என எண்ணற்ற விருதுகளையும், பாராட்டுகளையும் பெற்று, திரைவானில் புகழ் நட்சத்திரமாக மின்னி வருபவர்.

அவரது பெரும் புகழ் பெற்ற சங்கராபரணம் திரைப்படம் 43 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியான அதே நாளில் கே. விஸ்வநாத் மறைந்திருப்பது, அவரது தீராத கலைத்தாகத்தை காலக்கல்லில் கல்வெட்டாகச் செதுக்கிச் செல்லும் அரிய நிகழ்வாக அமைந்துள்ளது.

பல உன்னதமான திரைப்படங்களை, பல மொழிகளிலும் இயக்கிய கே.விஸ்வநாத், 24-க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் சிறந்த கதாபாத்திரங்களில் தோன்றி நடித்துள்ளார். அவரது மறைவு, இந்தியத் திரை உலகுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், திரையுலகினர் மற்றும் ரசிகர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்: ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் வேட்பு மனு தாக்கல் செய்தார்



**ஈரோடு, பிப். 04-**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதிக்கு இடைத்தேர்தல் வரும் 27-ம் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் காங்கிரஸ் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் போட்டியிடுகிறார்.

அவருக்கு ஆதரவு தெரிவித்து கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக தி.மு.க.வினர் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அமைச்சர்கள் கே.என். நேரு, சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, மா.சுப்பிரமணியன், எ. வ.வேலு, வி.செந்தில்பாலாஜி, ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் உள்ளிட்டோர் ஈரோட்டில் முகாமிட்டு தீவிரமாக பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் காங்கிரஸ் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தனது தேர்தல் பிரசாரத்தை கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கினார்.

அதை தொடர்ந்து நேற்று ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தனது வேட்பு மனுவை ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தாக்கல் செய்தார். பின்னர் நிருபர்களீடம் பேசிய இளங்கோவன், திமுக கூட்டணியில் காங்கிரஸ் கட்சி சார்பில் கை சின்னத்தில் போட்டியிடுவதற்காக கூட்டணி கட்சித் தலைவர்களுடன் வந்து வேட்புமனு தாக்கல் செய்துள்ளேன்.

என்னைப் பொறுத்தவரை தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்டு வெற்றி பெறுவதை காட்டிலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் போட்டியிட்டு வெற்றி பெறுவதை அதிகமாக விரும்புகிறேன். எனது மகன் பணியை நான் தொடர்ந்து செய்ய எனக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ஈரோட்டுக்கு ஏராளமான திட்டங்களை அறிவித்துள்ளார். ஈரோடு மாவட்ட வளர்ச்சி திட்டத்திற்காக நான் பாடுபடுவேன். இந்த தேர்தலில் நிச்சயமாக நாங்கள் மிகப் பெரும் வெற்றியை பெறுவோம் என்று இளங்கோவன் கூறினார்.

அதை தொடர்ந்து பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, அ.தி.மு.க.வின் இரு அணிகளையும் இணைக்க முயற்சி செய்து வருகிறாரே? என்று நிருபர்கள் கேள்வி எழுப்பியதற்கு பதில் அளித்த அவர், அண்ணாமலையை பொறுத்தவரை என்னை விட அவர் பெரிய மனிதர். அவர் பேச்சுக்கு நான் பதில் கூற விரும்பவில்லை என்று கூறினார்.

# ஸ்ரீரங்கம் கோவிலில் கோலாகலமாக நடந்த தைத்தேரோட்ட திருவிழா

## கோவிந்தா கோஷம் முழங்க வடம் பிடித்து இழுத்த பக்தர்கள்



**திருச்சி, பிப். 04-**

திருச்சி ஸ்ரீரங்கம் கோவிலில் நேற்று தைத்தேரோட்ட திருவிழா கோலாகலமாக நடந்தது. அப்போது கோவிந்தா கோஷம் முழங்க பக்தர்கள் தேரினை வடம் பிடித்து இழுத்தனர்.

பூலோக வைகுண்டம் என்று போற்றப்படுவதும், 108 வைணவ தலங்களில் முதன்மையானதுமான ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலில் ஆண்டுதோறும் தை மாதத்தில் பூபதித் திருநாள் எனப்படும் தை தேர்த்திருவிழா 11 நாட்கள் சிறப்பாக நடைபெறும். அதன்படி இந்த ஆண்டிற்கான தை தேர்த்திருவிழா கடந்த 26-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதையடுத்து தினமும் காலை, மாலை வேளைகளில் நம்பெருமாள் பல்வேறு வாகனங்களில் உத்திர வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தார். சிறப்பு நிகழ்ச்சிகளாக கடந்த 29-ம் தேதி தங்க கருட வாகனத்தில் வீதி உலா வந்தார். நேற்று முன்தினம் மாலை நம்பெருமாள் தங்கக்குதிரை வாகனத்தில் உத்திர வீதிகளில் உலா வந்து, தைத்தேர் அருகில் வையாளி கண்டருளினார்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் நேற்று காலை நடைபெற்றது. இதையொட்டி உற்சவர் நம்பெருமாள் அதிகாலை 3.45 மணிக்கு கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு 4.30 மணிக்கு தைத்தேர் ஆஸ்தான மண்டபம் வந்து சேர்ந்தார். காலை 4.30 மணி முதல் காலை 5.15 மணி வரை ரதரோஹணம் (தனுர் லக்னத்தில்) நடைபெற்றது.

அலங்கரிக்கப்பட்ட தேரில் நம்பெருமாள் உபய நாச்சியார்களுடன் எழுந்தருளினார். பின்னர் காலை 6 மணிக்கு திருத்தேர் வடம்பிடித்து இழுக்கப்பட்டது. அப்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோவிந்தா, கோவிந்தா கோஷத்துடன் வடம் பிடித்து தேரை இழுத்தனர்.

தேர் தெற்கு உத்திர வீதியிலிருந்து புறப்பட்டு மேற்கு உத்திர வீதி, வடக்கு உத்திர வீதி மற்றும் கிழக்கு உத்திர வீதிகளில் வலம் வந்து மீண்டும் காலை 10.00 மணிக்கு நிலையை அடைந்தது. வழி நெடுகிலும் தேரின் முன்பாக பக்தர்கள் தேங்காய் உடைத்தும், நெய் விளக்கு, சூடம் ஏற்றியும் வழிபட்டனர். இன்று சப்தாவரணம் நிகழ்ச்சி நடக்கிறது. தைத்தேர் திருவிழாவின் நிறைவு நாளான 5-ம் தேதி நம்பெருமாள் ஆளும் பல்லக்கில் எழுந்தருளி உத்திர வீதிகளில் வலம் வருகிறார். விழாவிற்கான ஏற்பாடுகளை ஸ்ரீரங்கம் கோவில் இணை ஆணையர் மாரிமுத்து, அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# சென்னையில் அனைத்து பள்ளிகளும் இன்று வழக்கம்போல் செயல்படும்

## மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் உத்தரவு

**சென்னை, பிப். 04-**

சென்னையில் உள்ள அனைத்து துவக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை பள்ளிகள் இன்று வழக்கம்போல் செயல்படும் என மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் உத்தரவிட்டுள்ளார். தொடர் பெருமழையின் காரணமாக சென்னை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து வகையான பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டது.

அப்பணி நாளை ஈடுசெய்யும் வகையில் சென்னையில் இன்று (04-02-2023) அனைத்து துவக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை பள்ளிகள் வழக்கம்போல் செயல்படும் என மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவித்துள்ளார். புதன்கிழமை பாடவேளையினை பின்பற்றி முழு பணி நாளாக கருதி பள்ளிகள் செயல்படும் என தலைமை ஆசிரியர்களுக்கும், முதல்வர்களும் சென்னை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மார்ஸ் உத்தரவிட்டுள்ளார்.

# அயோத்தி ராமர் கோயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல்

**அயோத்தி, பிப். 04-**

அயோத்தியில் கட்டப்பட்டு வரும் ராமர் கோயிலை வெடி வைத்துத் தகர்ப்போம் என்று மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பதாக உத்தரப்பிரதேச காவல்துறை தெரிவித்துள்ளது.

காவல்துறை கண்காணிப்பாளர் இது குறித்து பேசுகையில், அயோத்தியின் ராம் லல்லா சதன் பகுதியில் வசித்து வரும் மனோஜ் குமார் என்பவருக்கு அடையாளம் தெரியாத எண்ணிலிருந்து ஒரு அழைப்பு வந்தது. அதில், ராம் ஜென்மபூமி இடத்தில் கட்டப்பட்டு வரும் ராமல் கோயில் வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்படும் என்று மிரட்டல் விடுக்கப்பட்டதாக அவர் காவல்நிலையத்தில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி, வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபரை தேடி வருகிறார்கள். நேபாளத்திலிருந்து விஷ்ணு சிலை ராமர் கோயிலுக்கு நேற்று வந்தது. அதனை கோயில் பூசாரிகள் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மிகச் சிறப்பான வரவேற்பை அளித்திருந்தனர். இந்த நேரத்தில, இப்படி ஒரு மிரட்டல் விடுக்கப்பட்டது அப்பகுதியினரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

## தலைவர்கள் சொல்வதை படிங்க...



அனைத்து எதிர்க்கட்சிகளும் சேர்ந்து, எதிர்த்து திமுகவை வீழ்த்த ஒரு வேட்பாளரை நிறுத்துவதென்பது நல்ல ஒரு யோசனை. அப்படி ஒரு வாய்ப்பு ஏற்பட்டால், அதுபற்றி பேசலாம். ஆனால் நாங்கள் இந்த இடைத் தேர்தலில் போட்டியிடுவதில் உறுதியாக இருக்கிறோம்.

- டி.டி.வி. தினகரன்



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் அரசியல் திருப்பு முனையாக இருக்கும். தமிழ்நாட்டில் உண்மையான செயல்படக்கூடிய அரசியல் கட்சிகள் எவை என்பதை மக்களுக்கு அடையாளம் காட்டக்கூடிய அளவில் இந்த தேர்தல் இருக்கும்.

- கி.வீரமணி



மேகதாது திட்டத்தை தொடங்க சுப்ரீம் கோர்ட் அனுமதி வழங்கினால், பட்ஜெட்டில் நிதி ஒதுக்கி உடனடியாக பணிகளை தொடங்க அரசு தயாராக உள்ளது. மேகதாது அணைகட்டும் திட்டத்தில் விரிவான திட்ட அறிக்கைக்கு அனுமதி இல்லாத பட்சத்தில் எதுவும் செய்ய சாத்தியமில்லை.

- பசவராஜ் பொம்மை



அரசின் சேவைகள் பொதுமக்களுக்கு குறித்த நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமை. அதற்காக பொதுச் சேவை பெறும் உரிமை சட்ட முன்வரைவை மார்ச் மாதம் நடைபெறவுள்ள சட்டப்பேரவைக் கூட்டத்தில் அரசு தாக்கல் செய்து நிறைவேற்ற வேண்டும்.

- ராமதாஸ்

# தஞ்சாவூர் மாவட்டத்தில் அகில இந்திய அளவில் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்கும் 11வது சீனியர் சிட்டிங் பாரா வாலிபால் போட்டி

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்



**தஞ்சாவூர்,பிப்.04-**
தஞ்சாவூர் மாவட்டம் பெரியார் மணியம்மை பல்கலைகழக வளாகத்தில் அகில இந்திய அளவில் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்கும் 11வது சினியர் அகில இந்திய சிட்டிங் பாரா வாலிபால் போட்டியினை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் தலைமையில் (03.02.2023) குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள்.

பின்னர் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க இந்திய பாரா வாலி பால் சங்கம், தமிழ்நாடு பாரா வாலி சங்கம், தஞ்சாவூர் மாவட்ட பாரா வாலி சங்கம் சார்பில் தஞ்சாவூர் மாவட்ட நிர்வாகம். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சியுடன் இணைந்து அகில இந்திய அளவிலான மாற்றுத்திறனாளிகளுக்கான 11வது சினியர் அகில இந்திய சிட்டிங் பாரா வாலிபால் போட்டி (03.02.2023) முதல் (05.02.2023) தேதி வரை தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழக உள்விளையாட்டரங்கில் நடைபெற்று வருகிறது

இந்த போட்டியில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கேரளா, கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரா, உத்ராகாண்ட், ஜார்கண்ட், பீகார், ராஜஸ்தான், ஒரிசா, மேற்குவங்கம், திரிபுரா உள்ளிட்ட 22 மாநிலங்களிலிருந்து 36 அணிகளைச் சார்ந்த சுமார் 450 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொள்ள உள்ளனர். இந்தப் போட்டியிலிருந்து வீரர்கள் இந்திய அணிக்கு தேர்வு செய்யப்பட்டு உலக அளவில் நடைபெறும் பாரா ஒலிம்பிக் போட்டியில் கலந்து உள்ளனர்.; என்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தெரிவித்தார்.

பின்னர் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் 60 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 4 கோடி மதிப்பிலான கடன் உதவி தொகைகாண காசோலையினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர்கள் திருதுரை. சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்),தமிழ்நாடு பாரா வாலி சங்க மாநில தலைவர் டாக்டர் மக்கள் ஜிட ராஜன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதுநிலை மண்டல மேலாளர் சங்கீதா, தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் சரவணகுமார், தஞ்சாவூர் மாவட்ட தடகள சங்க தலைவர் கிருஷ்ணசாமி வாண்டையார், தஞ்சாவூர் மாவட்ட பாரா வாலி பால் சங்க தலைவர் இராமநாதன் துளசி அய்யா வாண்டையார் தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண் ராமநாதன், மாவட்ட ஊராட்சி தலைவர் ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, , மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் துணைவேந்தர் டாக்டர். எம். சுந்தர், பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்

அன்புராஜ், நிறுவன செயலர் எம். மகாதேவ், இந்திய பாராலிம்பிக் வாலிபால் அசோசியேசன் தலைவர் சந்திரசேகர், பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் துணைவேந்தர் டாக்டர் எஸ். வேலுச்சாமி, தமிழ்நாடு பாராவாலி அசோசியேசன் மாநில பொதுச் செயலாளர் ராஜா, பத்க்ரிஸ், சுக்பீர் சிங் , சந்திரசேகர் மாவட்ட விளையாட்டு அலுவலர் டேவிட் டேனியல் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்

# கரூர் மாவட்டத்தில் உதிரம் உயர்த்துவோம் திட்டத்தின் கீழ் 9ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு ரத்தசோகை தொடர்பான குறும்படம்

## கலெக்டர் த.பிரபுசங்கர் வெளியிட்டார்



**கரூர்,பிப்.04-**
கரூர் மாவட்டம், குளித்தலை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் (03.02.2023) கலெக்டர் டாக்டர்.த.பிரபுசங்கர். உதிரம் உயர்த்துவோம் திட்டத்தில் கிழ் 9ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அளவை கணக்கிட்டு அதற்கான அட்டையுடன் ஊட்டசத்து பெட்டகம் வழங்கி, மாணவி மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு இரத்த சோகை தொடர்பான குறும்படத்தினை வெளியிட்டார்கள்.

பின்னர் கலெக்டர் தெரிவிக்கையில்,

இந்தியாவிலேயே முதன்முறையாக கரூர் மாவட்டத்தில் உதிரம் உயர்த்துவோம் என்ற திட்டத்தில் 9ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பில் பயிலும் வளரிளம் பெண்களான மாணவிகளுக்கு அவர்களுடைய இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அளவை கணக்கிட்டு அதற்கு ஏற்ற சிகிச்சை அளிக்கக்கூடிய ஒரு உன்னதமான முன்னோடி திட்டத்தினை நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நம்முடைய மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குளித்தலை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இந்த திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகளுக்கு அவர்களுடைய இரத்தத்தின் அளவை பொறுத்து ஹீமோகுளோபின் அளவு ரொம்ப குறைந்த இரத்த சோகை இருந்தால் சிவப்பு நிற அட்டை வழங்கப்படுகிறது. கொஞ்சம் குறைவாக இருந்தாலும் மஞ்சள் அட்டையும், சரியான அளவு இருக்கும் குழந்தைகளுக்கு பச்சை அட்டையினையும் வழங்கி பெற்றோர்களை அழைத்து பள்ளி மேலாண்மை குழு கூட்டத்தில் குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் இரத்தசோகை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களுக்கும், அவர்களுடைய குழந்தைகளுடைய ஹீமோகுளோபின் அளவை தெளிவுபடுத்தப்பட்டு அதுவும் குறிப்பாக இரத்த சோகை மிக அதிகமாக உள்ள குழந்தைகளுக்கு கரூர் அரசு மருத்துவக் கல்லூரியிலேயே மேல் சிகிச்சை அளிப்பதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் ஒரு சிறப்பு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்படும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

இப்பொழுது நாம் 17000 மேற்பட்ட அரசு பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளி மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் 9ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு அவர்களின் பெற்றோர்களிடம் அனுமதி பெற்று இரத்தசோகை பரிசோதனை செய்து இந்த உதிரம் உயர்த்தும் திட்டத்தை அமல்படுத்தியிருக்கிறோம்.

இந்த திட்டத்தின் கீழ் நாம் எல்லா குழந்தைகளுக்கும் உரிய சிகிச்சை அளித்து அவர்களின் ஹீமோகுளோபின் அளவை சரியாக உயர்த்துவதற்கு தான் இந்த உதிரம் உயர்த்தும் என்ற திட்டம், இந்த திட்டம் இதுவரை செயல்படுத்தியதில் வெற்றிகரமாக நடந்து முடிந்தது. அதற்கு இந்த திட்டத்திற்காக சிறப்பாக செயலாற்றிய நம்முடைய கரூர் அரசு மருத்துவக் கல்லூரியின் உடைய முதல்வர் மற்றும் மருத்துவர் குழு மற்றும் துணை இயக்குநர் மற்றும் பள்ளிகளில் சேர்ந்த முதன்மை கல்வி அலுவலர் மற்றும் அனைத்து பள்ளி ஆசிரியர்களுடைய சிறப்பு பங்களிப்பின் மூலம் இதுவரை இந்த திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு அடுத்ததாக பெற்றோர்களுக்கு இந்த திட்டத்தின் மூலம் மிக முக்கிய பங்கு உள்ளது இந்த திட்டத்தில் அவர்களையும் பங்காளர்கள் ஆக்கியுள்ளோம். மருத்துவர்களுடன் இணைந்து குழந்தைகளும், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இனி இந்த திட்டத்தில் இணைந்து முன்னெடுத்து செல்வார்கள்.

இந்த திட்டம் கரூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுவதன் மூலம் விரைவில் தமிழ்நாடு முழுவதும் செயல் ப டுத் து வ தற்கு வாய்ப்பு உள்ளது. இது நாட்டிற்கு முன்னோடியாக விளங்கக்கூடிய திட்டம் ஏனெனில் இரத்தசோகை என்பது வளரிளம் வயதிலேயே சரி செய்யும் பொழுது அந்த குழந்தைகள் மிக ஆரோக்கியம் பெற்று எதிர் காலத்தில் அவர்களுடைய கல்வி, அனைத்து வகையிலும் சிறந்து விளங்குவார்கள். இது ஒரு மிக முக்கியமாக உன்னதமான ஒரு திட்டம் என்று கலெக்டர் டாக்டர்.த.பிரபுசங்கர். தெரிவித்துள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் கரூர் அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சீனிவாசன், துணைஇயக்குநர் .(சுகாதாரப்பணிகள்) மரு.சந்தோஷ்குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கீதா, தனித்துணை கலெக்டர் (சபாதி) சைபுதீன், வருவாய் கோட்டாட்சியர் புஷ்பாதேவி, மரு.தெய்வநாதன், மரு.சுதர்சனயேசுதாஸ், மரு.ஏபில், மரு.வெற்றிச்செல்வன், தலைமையாசிரியர்.மஞ்சுளா மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் மழையினால் பாதிக்கப்பட்ட பயிர்கள்

## வேளாண்மைத்துறை இயக்குநர் நேரில் ஆய்வு



**புதுக்கோட்டை,பிப்.04-**
புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டாரம், பூவலூர் கிராமத்தில் மழையினால் சம்பா பருவத்தில் சாகுபடி செய்த பயிர்களில், அறுவடை நிலையிலிருந்த நெற்பயிர்கள் பாதிப்படைந்துள்ளதை, வேளாண்மைத்துறை இயக்குநர் ஆ. அண்ணாதுரை, (03.02.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, வேளாண்மைத்துறை இயக்குநர் தெரிவித்ததாவது;

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2023 பிப்ரவரி 1 மற்றும் 2 ஆம் தேதியில் பெய்த மழையினால் சம்பா பருவத்தில் சாகுபடி செய்த பயிர்களில் அறுவடை நிலையிலிருந்த நெற்பயிர்கள் பாதிப்படைந்துள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி, புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் வட்டாரம், பூவலூர் கிராமத்தில் ஆரோக்கியமேரி மற்றும் ராமு ஆகியோர்களது வயல்களில் அறுவடைக்கு தயாராக இருந்த நெல் சம்பா பயிர்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின்போது கிராம மக்களும் கலந்துகொண்டனர்.

மேலும் சம்பா நெல் அறுவடை நிலையில் உள்ள பயிர்கள் இரண்டு நாட்களில் பெய்த மழையினால் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த நெல் பயிர் நனைந்த காரணத்தினால் பயிர் சாய்ந்து உள்ளது. இதன்மூலம் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து நெல் மணிகளை பாதுகாக்கும் வகையில், பள்ளமான வயல்களில் தேங்கியுள்ள நீரினை வடிகால் அமைத்து வடித்து, நெல் மணிகள் நனைந்து முளைக்காமல் இருக்க, வயலினை காய விட்டு, அறுவடை பணிகள் மேற்கொள்ள விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அறந்தாங்கி, ஆவுடையார் கோவில், மணமேல்குடி ஆகிய வட்டாரங்களில் ஏற்கனவே அறுவடை செய்த நெல் வயல்களில் நெல்லுக்கு பின்பு உளுந்து பயிர் சாகுபடி செய்திட விவசாயிகளிடம் அறிவுரை வழங்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 9 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயறுவகை பயிர், உளுந்து பயிர் சாகுபடி செய்தி இலக்கு வழங்கப்பட்டுள்ளது. நெல்லுக்கு பின்பு உளுந்து சாகுபடி செய்திட 50 சதவீத மானிய விலையில் சான்று பெற்ற விதைகள் மாவட்டத்தில் உள்ள 13 வட்டாரங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

எனவே நெல் தரிசில் அறுவடை முடிந்த வயல்களில் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற்றிடவும், மேலும் மண்வளம் காத்திடவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என வேளாண்மைத்துறை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, தெரிவித்தார். இந்த ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, வேளாண்மை இணை இயக்குனர் மா.பெரியசாமி, அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் சு.சொர்ணராஜ், வேளாண்மை துணை இயக்குனர் (மாநில திட்டம்) மோகன்ராஜ், அறந்தாங்கி வேளாண்மை உதவி இயக்குனர் செல்வி.பத்மப்பிரியா, ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் வில்லியம் மோசஸ், வேளாண்மை அலுவலர்கள் செல்வி.பிரவினா, செல்வி.பாக்யா, உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உடனிருந்தனர்.

# கல்வி மற்றும் கல்வி இணைச்செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் மாணவ, மாணவியர்களுக்கு பெருந்தலைவர் காமராசர் விருது

## கலெக்டர் பெ.ரமண சரஸ்வதி வழங்கினார்



**அரியலூர்,பிப்.04-**
அரியலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் கல்வி மற்றும் கல்வி இணைச்செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் மாணவ, மாணவியர்களுக்கு பெருந்தலைவர் காமராசர் விருது மற்றும் பரிசுத் தொகைகளை கலெக்டர் பெ.ரமண சரஸ்வதி, (03.02.2023) வழங்கினார்.

2016-17ஆம் கல்வியாண்டு முதல் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று தேர்ச்சி பெறும் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களில் கல்வி மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் மாணவ, மாணவியர்களுக்கு பெருந்தலைவர் காமராசர் விருது மற்றும் பரிசுத் தொகை வழங்கி மாணவர்களின் கல்வி மற்றும் தனித்திறன்களை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழக அரசால் ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தி வருகிறது.


அதன்படி, இன்றைய தினம் மாவட்ட ஆட்சியரகத்தில் கல்வி மற்றும் கல்வி இணைச்செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் மாணவ, மாணவியர்களுக்கு பெருந்தலைவர் காமராசர் விருது மற்றும் பரிசுத் தொகைகளை கலெக்டர் வழங்கினார்.

அரியலூர் மாவட்டத்தில் 2021-2022ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழ் வழியில் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களில் சிறந்த 30 மாணவ, மாணவியர்களை மாவட்ட அளவில் தேர்ந்தெடுத்து, அம்மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

மேலும், பாராட்டுச் சான்றிதழ் பெற்ற 10-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.10,000 வீதம் 15 மாணவர்களுக்கும், 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.20,000 வீதம் 15 மாணவர்களுக்கும் என மொத்த ரூ.4,50,000 ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

இந் நி கழ்ச் சி யில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ம.ச.க லை வாணி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் விஜயலெட்சுமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பூங்கோதை மற்றும் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# திருமருகல் ஒன்றியத்தில் அண்ணா நினைவு நாள் அனுசரிப்பு



**நாகப்பட்டினம்,பிப்.04-**
நாகை மாவட்டம் திருமருகல் திமுக கட்சி அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணாவின் 54-வது நினைவு நாளை முன்னிட்டு அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.இந்நிகழ்ச்சிக்கு திருமருகல் வடக்கு ஒன்றிய செயலாளர் செல்வசெங்குட்டுவன் தலைமை வகித்து அண்ணாவின் திரு உருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.நிகழ்ச்சியில் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.அதேபோல் தெற்கு ஒன்றியம் சார்பில் உத்தமசோழபுரம் ஊராட்சி பூதங்குடியில் அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு தெற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.டி.எஸ். சரவணன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி செலுத்தப்பட்டது.அதேபோல் திட்டச்சேரியில் திமுக நகர செயலாளர் எம்.முகமது சுல்தான் தலைமையில் அண்ணாவின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

# அரியலூரில் அண்ணாவின் 54 வது நினைவு தினம் பல்வேறு அரசியல் கட்சிகள் சார்பில் அனுசரிப்பு



**அரியலூர்,பிப்.04-**
அண்ணாவின் 54வது நினைவு தினத்தையொட்டி அரியலூர் பேருந்து நிலையம் அருகேயுள்ள அவரது சிலைக்கு பல்வேறு அரசியல் கட்சியினர் நேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அரியலூர் பேருந்து நிலையம் அருகேயுள்ள அண்ணா சிலைக்கு திமுக சார்பில் தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன், முன்னாள் எம்எல்ஏ பாளை.அ ம ர மூர்த்தி, மாவட்ட துணைசெயலாளர்கள் லதா பாலு, அருங்கால் சந்திரசேகரன், நகரச்செயலாளர் முருகேசன், நகர்மன்றத்தலைவர் சாந்தி, நகர்மன்றத்துணை தலைவர் தங்க கலியமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் அன்பழகன், அறிவழகன், இரா. கென்னடி, அசோகசக்ரவர்த்தி, உட்பட கட்சி நிர்வாகிகள் பலரும் உடனிருந்தனர்.

அதிமுக சார்பில் ,அக்கட்சியின் மாவட்டச் செயலாளர் தாமரை எஸ்.ராஜேந்திரன் தலைமையில் அதிமுகவினர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு, நினைவு தினத்தையொட்டி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் இந்நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகிகள் அன்பழகன், ஒபிசங்கர், ஜீவா அரங்கநாதன், வெங்கடாஜலபதி, ஒன்றிய செயலாளர்கள் பொய்யூர் பாலசுப்பிரமணியம், செல்வராசு, நகர செயலாளர் ஏபி செந்தில் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். மதிமுக சார்பில் அரியலூர் எம்எல்ஏ கு.சின்னப்பா தலைமையில், மாவட்ட துணை செயலாளர் வாரணவாசி கி.ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் இராமநாதன் , சங்கர், நகர செயலாளர் இராம.மனோகரன், மற்றும் பலர் திரண்டு ஊர்வலமாக வந்து அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். எம்ஜிஆர் கழகம் சார்பில் மாநில அமைப்புச் செயலாளர் கலைவாணன், மாவட்ட செயலாளர் மணிவேல், நகர செயலாளர் மருதமுத்து மற்றும் நிர்வாகிகள் பலர் அண்ணாநினைவு தினத்தை முன்னிட்டு அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதிமுக (ஓபிஎஸ் அணி) மாவட்டச் செயலாளர் அன்பு.விஜய பார்த்திபன், நகர செயலாளர் உத்தண்டம் கார்த்திக், மாநில பொதுகுழு உறுப்பினர் லோகராஜ், மாவட்ட கட்சி நிர்வாகிகள் வரதராஜன், கல்லங்குறிச்சி பொன்னுசாமி, அழகு பாண்டியன், ஜெம் கண்ணன், கண்ணன் மூர்த்தி ஒன்றிய செயலாளர் சுண்டக்குடிசுரேஷ், நகர நிர்வாகிகள் ரகுபதி, மீசைமுத்து உள்ளிட்ட கட்சியினருடன் ஊர்வலமாக சென்று, அண்ணாசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



**திருச்சியில் அண்ணாவின் 54ஆவது நினைவு நாளை முன்னிட்டு அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் திமுகவினர் மவுன ஊர்வலமாக சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.**

# அண்ணா நினைவு தினம்



**சுவாமிமலை,பிப்.04-**
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தஞ்சை வடக்கு மாவட்ட அதிமுக ஒபிஎஸ் அணி சார்பில் அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு கும்பகோணத்தில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது

இந்நிகழ்ச்சியில் கும்பகோணம் தொகுதி அமைப்பாளர் சேகர் ஒன்றிய செயலாளர்செந்தில் பாலமுருகன் பாலமுருகன் .பகுதி செயலாளர்கள் சாரங்கன். அப்பு.ஐயா அழகேசன்.துரைராஜ் மாவட்ட பிரிவு செயலாளர்கள்ஹரி கிருஷ்ணன் பண்டியன்,

மருத்துவர் ஐயப்பன் தொகுதி இணை அமைப்பாளர் ரமேஷ் பொதுக்குழு உறுப்பினர் ஜீவகன் ஒன்றிய துணைச் செயலாளர் சிவகுமார் ஒன்றிய அவைத் தலைவர் சம்பத் ஒன்றிய பிரிவு நிர்வாகிகள் பரத், சதீஷ்.மற்றும் அனைத்து பிரிவு செயலாளர்கள்.

## திருவாரூர் மாவட்ட

## விவசாயிகள் குறைந்த செலவில் கூடுதல் வருமானம் கிடைத்திட, சம்பா மற்றும் பச்சைப்பயறு சாகுபடி செய்து பயன்பெறலாம்

### மாவட்ட வருவாய் அலுவலர் ப.சிதம்பரம் தகவல்

**திருவாரூர் ,பிப்.04-**

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் 86943 எக்டரிலும் தாளடி பருவத்தில் 61376 எக்டரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்களின் அறுவடை நடைபெற்று வருகின்றன. நெல்லுக்குப்பின் பயறு சாகுபடி திட்டத்தின் கீழ் வேளாண் விளைநிலங்களில் மண் வளத்தினை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு குறைந்த செலவில் கூடுதல் வருமானம் கிடைத்திடவும், சம்பா மற்றும் தாளடி நெல் அறுவடைக்குப்பின் உளுந்து, பச்சைப்பயறு சாகுபடி செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறை அமைச்சர் அவர்களால் வேளாண் விளைநிலங்களில் மண் வளத்தினை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு குறைந்த செலவில் கூடுதல் வருமானம் கிடைத்திடவும், சம்பா நெல் அறுவடைக்குப்பின் உளுந்து, பச்சைப்பயறு சாகுபடி செய்திட நெல்லுக்குப்பின் பயறு திட்டம் அறிவிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் பத்து இலட்சம் ஏக்கரில் இத்திட்டம் செயல்டுத்தப்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில், நெல்லுக்குப்பின் பயறு திட்டமானது 250000 ஏக்கரில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு 20 கிலோ பயறு விதைகளுக்கு 50 சதவீத மானியமாக ரூ.1000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக வேளாண் விரிவாக்க மையங்களில் சான்று விதைகள் 308 டன் பயறு விதைகள் இருப்பு வைக்கப்பட்டு, விதை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வேளாண் விரிவாக்க மையங்களில் ரைசோபியம், பாஸ்போபாக்டீரியா போன்ற உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளான டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் சூடோமோனாஸ், பயறு வகை பயிர்களுக்கு தேவையான நுண்ணூட்டங்கள் போன்ற இடுபொருட்கள் 50 சதவீதம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. மேலும், இத்திட்டத்தின் பயன்பெற விரும்பும் விவசாயிகள் உழவன் செயலியில் தேவைப்படும் இடுபொருட்களை பதிவு செய்து பயன் அடைந்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. பயறு சாகுபடி தொழில் நுட்பங்கள் ஒரு கிலோ விதைக்கு கார்பன்டசிம் 2 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்ய வேண்டும். கார்பன்டசிம் விதை நேர்த்தி செய்த பின்பு 24 மணி நேர கால இடைவெளி அவசியம். ஒரு ஏக்கருக்குத் தேவையான விதைகளுக்கு நுண்ணுயிர் உரங்களான ரைசோபியம் 200 கிராம், பாஸ்போபாக்டீரியா 200 கிராம் மற்றும் எதிர் பூஞ்சாண உயிர்கொல்லிகளான டிரைக்கோடெர்மா விரிடி 40 கிராம் அல்லது சூடோமோனாஸ் புளூரசன்ஸ் 100 கிராம் என்ற அளவில் குளிர்ந்த அரிசி கஞ்சியை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து நிழலில் உலர்த்தி பின்பு விதைக்க வேண்டும். பயிர் எண்ணிக்கையை பராமரிப்பதற்கு சரியான ஈரப்பதத்தில் விதைத்தல் மிகவும் அவசியம். விதைகளை நெல் அறுவடைக்கு சுமார் 7 முதல் 10 நாட்களுக்கு முன் சரியான ஈரப்பதத்தில் (மெழுகு பதத்தில்) நிலத்தில் தூவ வேண்டும். உளுந்து விதைக்கவுள்ள சம்பா மற்றும் தாளடி வயல்களில் நிலத் தயாரிப்பின்போது நடவுக்கு முன்பு நிலத்தை நன்கு சமன் படுத்துதல் அவசியம். நெல் தரிசுப்பயிர்களில் பயிர் எண்ணிக்கையை பராமரிக்க இது மிகவும் உதவுகிறது.

நெல் அறுவடைக்கு முன்பு பயறு தெளிக்க முடியாமல் போனால் அறுவடை செய்த பிறகு நீர் பாய்ச்சி சரியான ஈரப்பதத்தில் வரிசைக்கு வரிசை 30 செ.மீ இடைவெளியும் ஒரு வரிசையில் செடிக்கு செடி 10 செ.மீ இடைவெளியும் இருக்குமாறு கைவிதைப்பு மூலம் வயலில் விதைகளை ஊன்றி விடலாம். என்.ஏ.ஏ வளர்ச்சி ஊக்கியை 40 மி.கி/லிட்டர் என்ற அளவில் பூக்கும் பருவத்திற்கு முன்பும் 15 நாட்கள் கழித்தும் தெளிக்க வேண்டும். பயறு அதிசயம் 5 கிலோ-எக்டர் அளவில் பூக்கும் பருவத்தில் ஒரு முறை அல்லது டிஏபி 2 சதவீதக் கரைசலை பூக்கும் பருவத்திலும், பின்பு 15 நாட்கள் கழித்தும் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். சாலிசிலிக் அமிலம் 100 மி.லி. என்ற அளவில் பூக்கும் பருவத்திற்கு முன்பும், 15 நாட்கள் கழித்தும் தெளிக்க வேண்டும். இத்திட்டம் தொடர்பான விவரங்களுக்கு தங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி விவசாயிகள் பயனடையுமாறு மாவட்ட வருவாய் அலுவலர் ப.சிதம்பரம் கேட்டுக்கொண்டுள்ளார்.



அண்ணாவின் நினைவு நாளையொட்டி திருச்சி புறநகர் வடக்கு மாவட்ட அ.தி.மு.க சார்பில் அண்ணா சிலைக்கு மாவட்ட செயலாளர் பரஞ்ஜோதி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அருகில் முன்னாள் அமைச்சர் வளர்மதி,சிறுபான்மை பிரிவு மாவட்ட செயலாளர் புல்லட் ஜான், ஒன்றிய செயலாளர்கள் முத்துகருப்பன், ஜெயக்குமார் உள்ளனர்.

## திட்டச்சேரியில் குளத்தை ஆக்கிரமித்துள்ள ஆகாய தாமரை செடிகள் அகற்றப்படுமா? பொதுமக்கள் எதிர்பார்ப்பு

**நாகப்பட்டினம்,பிப்.04-**

திட்டச்சேரியில் குளத்தை ஆக்கிரமித்துள்ள ஆகாய தாமரை செடிகளை அகற்ற வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

நாகை மாவட்டம் திட்டச்சேரி பேரூராட்சிக்கு உட்பட்ட பச்சாந்தோப்பு அருகே கரிக்குளம் உள்ளது. இந்த குளத்தை அருகில் உள்ள பச்சாந் தோப்பு, ஆற் றாங் கரை தெரு, தைக்கால் தெரு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த மக்கள் குளிப்பதற்கும் மற்றும் பல்வேறு பயன்பாட்டிற்கும் பயன்படுத்தி வந்தனர்.மேலும் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்ட குழாயிலிருந்து உபரி நீர் வருடம் முழுவதும் இந்த குளத்தில் வந்து சேர்கிறது.இதனால் கோடையிலும் குளத்தில் நீர் வற்றாமல் அப்பகுதிக்கு முக்கிய நீர்நிலை ஆதாரமாக உள்ளது.இந்த நிலையில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் குளம் குடிமராமத்து பணியில் தூர் வாரப் பட்டது.ஆனால் கடந்த 1 ஆண்டாக கரிக்குளம் எந்தவித பராமரிப்பும் இல்லாமல் உள்ளது. இதனால் குளத்தில் ஆகாயத் தாமரை செடிகள்,கொடிகள் மண்டி புதர் போல் காட்சியளிக்கிறது. குளத்தின் படிக்கட்டுகள் சுகாதாரமற்று காணப்படுகிறது.இதனால் குளத்தினை பயன்படுத்த முடியாமல் மக்கள் உள்ளனர்.மேலும் கடந்த ஆண்டு இக்குளம் மீன் பாசி குத்தகைக்கு விடப்பட்டு குளத்தில் ஆகாயத்தாமரை செடிகள் அதிகம் இருப்பதால் மீன் கூட பிடிக்க முடியாமல் உள்ளது. கரிக்குளத்தில் ஆகாயத் தாமரை செடிகள் மண்டி உள்ளதால் கிராம மக்கள் பக்கத்தில் உள்ள ஆற்றிற்கு சென்று பயன்படுத்தி வருகின்றனர்.இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறையினரிடம் புகார் தெரிவித்தும் இதுவரை எந்த வித நடவடிக்கை எடுக்கவில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.எனவே சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுத்து கரிக்குளத்தை ஆக்கிரமித்துள்ள ஆகாயத் தாமரை செடிகளை அகற்ற வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வேதாரண்யம் தாலுக்காவில் சம்பா சாகுபடி செய்யப்பட்டு அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் நீர் சூழ்ந்து பாதிப்பு



**வேதாரண்யம்,பிப்.04-**

வேதாரண்யம் தாலுக்காவில் கடந்த மூன்று நாட்களாக பெய்துவரும் கனமழையில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் அறுவடைக்கு தயாராக இருந்த சம்பா நெற்பயிர்கள் கதிரோடு சாய்ந்து தண்ணீரில் மூழ்கி அழுகி உள்ளது இந்த மழை நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு பெரும் துயரத்தை ஏற்படுத்தி உள்ளது

காலத்தில் பருவமழை சீராக பெய்து நெற்பயிர்கள் நன்றாக விளைந்து பத்து நாட்களில் அறுவடைக்கு தயாராக இருந்தது கடந்த ஆண்டுகளை காட்டிலும் விளைச்சல் அதிகமாக இருக்கும் என விவசாயிகள் மகிழ்;ச்சியுடன் இருந்தனர்

இந்த நிலையில் வேதாரண்யம்; தலைஞாயிறு மற்றும சுற்று வட்டாரப் பகுதியில்; கடந்த மூன்று நாட்களாக பெய்த கனமழையால் ஆதனூர் கருப்பம்புலம் பஞ்சநதிக்குளம் மருதூர் தாணிக்கோட்டம், கரியாப்பட்டினம் மணக்காடு தலைஞாயிறு உம்பளச்சேரி உள்ளிட்ட சுற்று வட்டாரக் கிராமங்களில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்களை கீழே சாய்ந்து மழை நீர் பயிர்களை சூழ்ந்து அழுகும் நிலையில் உள்ளது நான்கு மாத காலம் கஷ்டப்பட்டு சாகுபடி செய்த விவசாயிகள் அறுவடை நேரத்தில் நெல் மணிகள் அழிந்து போவதை கண்டு பெரும் துயரத்திலும் மன வேதனையிலும் உள்ளனர்;; மழையால் நீரில் சாய்ந்து அழுகிய நிலையில் உள்ள நெற்பயிர்களை வேளாண்மைத்துறை மூலம் ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய அரசு இழப்பீடு வழங்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுருத்தி உள்ளனர்.

## வேதாரண்யம் பகுதியில் கடந்த இரண்டு நாட்கள் பெய்த கனமழையால் உப்பளங்கள் நீரில் முழ்கி உற்பத்தி பாதிப்பு

**வேதாரண்யம்,பிப்.04-**

வேதாரண்யம் பகுதியில் கடந்த நவம்பர் மாதம் பெய்த வடகிழக்கு பருவ மழையினால் பாதிக்கப்பட்ட மூவாயிரம் ஏக்கர் உப்பளங்களில் மூன்று மாதங்களுக்கு பிறகு உப்பு உற்பத்திக்;கான தரிசுப் பணிகளில் தொழிலாளர்கள் மும்மூரமாக ஈடுபட்டு வந்தனர்

அகஸ்தியன்பள்ளி, கோடியக்காடு, கோடியக்கரை, உள்ளிட்ட கிராமங்களில் சாப்பாட்டு உப்பு உற்பத்தி மூவாயிரம் ஏக்கரில் 850க்கு மேற்பட்ட சிறு குறு உப்பு உற்பத்தியாளர்கள் உப்பு உற்பத்தி பணியில் ஈடுபட்டு வருகின்றனர்

இத்தொழிலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 15 ஆயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்

கடந்த 20 நாட்களுக்கு மேலாக மழையில்லாததால் வேதாரண்யம் பகுதியில் உள்ள உப்பளங்களில் உப்பு உற்பத்திக்கான வாய்கால் சீரமைத்தல் உப்பள பாத்திகளின் வரப்பு சரி செய்தல் பாத்திகளை சீரமைத்தல் போன்ற தரிசுப் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டு வந்தனர்; தரிசு பணிகளை முடித்து உப்பளங்களில் உப்பு உற்பத்தியைத் தொடங்க உற்பத்தியாளர்கள் தயாராக இருந்தனர்

இந்த நிலையில் எதிர்பாராதவிதமாக கடந்த இரண்டு தினங்களாக பெய்த கனமழையால் உப்பளங்களில் தண்ணீர் தேங்கி உப்பு உற்பத்திக்கான பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன கடந்த இரண்டு நாட்களில் மட்டும் வேதாரண்யத்தில் 11 செமி மழை பெய்து பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது உப்பு பாத்திகளை சீரமைக்க ஏக்கருக்கு ரூபாய் 20 ஆயிரத்துக்கு மேல் செலான நிலையில் கனமழையால் பெரும் பாதிப்புக்கு ஆளாகி உள்ளதாக உப்பு உற்பத்தியாளர்கள் வேதனை தெரிவித்துள்ளனர் உப்பள பாத்ததிகளில் தண்ணீர் தேங்கி உள்ள நிலையில் தண்ணீர் வடிந்து பாத்திகளை சீரமைத்து மீண்டும் உப்ப உற்பத்தி துவங்க ஒரு மாதமாகும் என உப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## நீலாங்கரையில் பெயிண்டர் குத்திக்கொலை: நான்கு பேர் கைது

**சென்னை பிப் 04-**

நீலாங்கரையில் பெயிண்டர் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக அவரது நண்பர்கள் 4 பேர் கைது செய்யப்பட்டனர். சென்னையை அடுத்த கொட்டிவாக்கம் பகுதியை சேர்ந்தவர் ராகவேந்திரா (வயது 29). பெயிண்டரான இவர், நேற்று முன்தினம் இரவு நீலாங்கரையில் உள்ள மைதானத்தில் தனது நண்பர்கள் 4 பேருடன் அமர்ந்து மது அருந்தினார். அப்போது அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது. ராகவேந்திரா 4 பேரை தாக்கி உள்ளார். இதில் ஆத்திரமடைந்த 4 பேரும் சேர்ந்து ராகவேந்திராவை கத்தியால் குத்திக் கொலை செய்தனர்.

பின்னர் அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்ற போது அப்பகுதி பொதுமக்கள் உதவியுடன் நீலாங்கரை போலீசார் மடக்கி பிடித்து 4 பேரையும் கைது செய்தனர். மேலும் அவர்களிடம் எதற்காக ராகவேந்திராவை கொலை செய்தார்கள்? என போலீசார் விசாரித்து வருகின்றனர்.

ஜார்கண்ட் மாநிலத்தை சேர்ந்தவர் ரமேஷ் மண்டல் (27). இவர் வேளச்சேரி வி.ஜி.பி., செல்வா நகரில் நடக்கும் கட்டிட கட்டுமான நிறுவனத்தில் கொத்தனாராக பணி புரிந்து வந்தார். கடந்த மாதம் 27-ந் தேதி நண்பர்களுடன் சாலையில் நடந்து சென்று கொண்டு இருந்தார். அப்போது எதிரே வந்த பெருங்குடி, கல்லுக்குட்டைய சேர்ந்த 5 சிறுவர்கள் மீது மோதினர். இதனால் இரு தரப்புக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இதில் வடமாநில வாலிபர்கள், சிறுவர்களை தாக்கி விட்டு அங்கிருந்து சென்று உள்ளனர். பின்னர் 5 சிறுவர்களும் கல்லுக்குட்டைக்கு சென்று வட மாநிலத்தை சேர்ந்தவர்கள் தாக்கியதாக கூறி 4 பேரை அழைத்து வந்தனர்.

மீண்டும் தகராறு ஏற்பட்டு ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டனர். இதில் ரமேஷ் மண்டல் பலத்த காயம் அடைந்து ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி அவர் பரிதாபமாக இறந்தார். இது குறித்து வேளச்சேரி போலீசார் கொலை வழக்குப் பதிவு செய்து கல்லுக்குட்டை பகுதியை சேர்ந்த ஹரிஹரன் (20), கோகுல் (19) மற்றும் 17 வயதுக்கு உட்பட்ட 7 சிறுவர்களை கைது செய்தனர்.

தலைகவசம்
உயிர் கவசம்

## பெரம்பலூர் மாவட்டத்தில் வடலூர் ராமலிங்கர் நினைவு தினத்தை முன்னிட்டு நாளை டாஸ்மாக் கடைகள் இயங்காது

### கலெக்டர் ப. ஸ்ரீ வெங்கட பிரியா தகவல்

**பெரம்பலூர்,பிப்.04-**

பெரம்பலூர் மாவட்டத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் (டாஸ்மாக்) அனைத்து மதுபான சில்லரை விற்பனை கடைகள், மதுபான சில்லரை விற்பனை கடைகளுடன் இணைந்த மதுக்கூடங்கள் மற்றும் FL3 உரிமம் பெற்ற தனியார் மதுபானக்கூடங்கள் ஆகிய அனைத்திற்கும் வடலூர் இராமலிங்கர் நினைவு தினத்தினை முன்னிட்டு 05.02.2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்று ஒரு நாள் மட்டும் உலர் தினமாக (DRY DAY) விடுமுறை அறிவிக்கப்படுகிறது என கலெக்டர் ப. ஸ்ரீ வெங்கட பிரியா, தெரிவித்துள்ளார்.

## கந்தர்வகோட்டை பகுதியில் தொடர் மழையால் நெல் கதிர்கள் சேதம்: விவசாயிகள் கவலை



**கந்தர்வகோட்டை,பிப்.04-**

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை பகுதியில் வட கிழக்கு பருவமழை போதிய அளவு இல்லாததால் விவசாயிகள் ஆழ்துளை கிணற்றின் மூலம் நெல் நடவு செய்து முறையாக பராமரித்து வந்த நிலையில் அறுவடைக்கு தயாராக இருந்து வந்தது. இப்பகுதியில் திடீரென சில நாட்களாக மழை பெய்து வருவதால் கணபதிபுரம் கிராமத்தில் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த நெல் கதிர்கள் பாதிப்படைந்துள்ளது .இதனை கண்டு விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர். இப்பகுதிக்கு தேவையான அளவு அரசு நேரடி கொள்முதல் நிலையங்களை திறந்து விவசாயிகளிடம் உள்ள நெல்களை உடனடியாக கொள்முதல் செய்ய வேண்டும் என கோரிக்கை வைக்கிறார்கள்.

## சீன நாட்டினர் ஊடுருவ உள்ளதாக கிடைத்த தகவலின் பேரில் வேதாரண்யம் பகுதியில் போலீசார் தீவிர கண்காணிப்பு

**வேதாரண்யம்,பிப்.04-**

இலங்கையில் இருந்து படகு மூலம் சீன நாட்டினர் ஊடுருவ உள்ளதாக வந்த தகவலின் பேரில் வேதாரண்யத்தில், கடலோர கிராமங்களில் போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். இலங்கையில் இருந்து சீன நாட்டைச் சேர்ந்த நான்கு பேர் கடல் வழியாக தமிழ்நாட்டிற்குள் ஊடுவ வாய்ப்பு உள்ளதாக மத்திய, மாநில அரசுகளின் உளவுத்துறை மூலம் நுண்ணறிவு போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

இதனைத்தொடர்ந்து தமிழக கடற்கரையோரங்களில் போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அதன் ஒரு பகுதியாக நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே உள்ள கோடியக்கரை, கோடியக்காடு, சிறுதலைக்காடு, மணியன்தீவு, ஆறுகாட்டுத்துறை, புஷ்பவனம், நாலுவேதபதி, வானவன்மகாதேவி, வெள்ளப்பள்ளம் போன்ற கடலோர கிராமங்களில்; தீவிர கண்காணிப்பு பணியில் போலீசார ஈடுபட்டனர். கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகளில் கடலோர காவல் குழும போலீசார், சுங்கத்துறையினர் கியூ பிரிவு போலீசார், சோதனை மேற்கொண்டனர் அறிமுகம் இல்லாத புதிய நபர்கள் யாராவது வந்தால் உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என மீனவர்களுக்கு, அறிவுருத்தப்பட்டது தொடர்ந்து இரவு முழுதுவம் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

## வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு நிலையால் மீனவர்கள் 4-வது நாளாக மீன்பிடிக்க செல்லவில்லை

**வேதாரண்யம்,பிப்.04-**

வேதாரண்யம் கடற்பகுதியில் தென்மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடல் சீற்றத்துடன் சூறைக் காற்று வேகமாக வீசி வருகிறது

இந்த நிலையில் கடலோர மாவட்டங்களில் பலத்த மழையும் சுழல் காற்று 55 கிமி வேகத்திற்கும் வீசும் என்பதால் மீனவர்கள் யாரும் மறு அறிவிப்பு வரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என மீன்வளத்துறை மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது

இதனால் கோடியக்கரை ஆறுகாட்டுத்துறை, வெள்ளப்பள்ளம் புஷ்பவனம் வானவன்மகாதேவி போன்ற 15 கடலோர கிராமங்களில்; கடல் சீற்;றம் சூறைக்காற்று காரணமாக 4-வது நாளாக பத்தாயிரம் மீனவர்கள் கடலுக்கு செல்லாமல் உள்ளனர் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பைபர் படகுகளை கரையில் பாதுகாப்பாக மீனவர்கள் நிறுத்தி உள்ளனர்.

## பூண்டி வடக்கு ஒன்றியம் சார்பாக அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



**ஊத்துக்கோட்டை, பிப்-04.**

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அம்மம்பாக்கம் ஊராட்சி சீத்தஞ்சேரி பஜார் பகுதியில் முன்னாள் தமிழக தமிழக முதல்வர் பேறிஞர் அண்ணா அவர்களின் 54-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திமுக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான கல்வியாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் ஆலோசனைப்படி பூண்டி வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் வழக்கறிஞர் ஜான் என்கின்ற எம்.பொன்னுசாமி தலைமையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் பூண்டி வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பிற அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மழைநீர்
உயிர்நீர்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**Before the Motor Accident claims Tribunal, Perambalur**
**M.C.O.P. No.178/2022**

1.மலர்க்கொடி, க/பெ.(லேட்).ராஜேந்திரன், எண் 2005 பஜனைமட தெரு, ஒட்டம்பட்டி, துறையூர் சிக்கதம்பூர் வடக்கு,
2.சசிகுமார். த/பெ.(லேட்) ராஜேந்திரன், எண்:1/6 செல்லியம்மன் கோவில் தெரு, அயிலூர்,பெரம்பலூர்,
3.ரமணி, க/பெ.கார்த்திகேயன், த/பெ.(லேட்).ராஜேந்திரன், எண் 64/22, இந்திராகாந்தி தெரு, கே.கே நகர், திருச்சி,
4.நிவேதா, த/பெ.(லேட்).ராஜேந்திரன், எண்:10/43,A.பஜனைமட தெரு, ஒட்டம்பட்டி, துறையூர், சிக்கதம்பூர் வடக்கு, திருச்சி,
5.முத்துசாமி, த/பெ.(லேட்)மொட்டையன்,
6.பழனியம்மாள், க/பெ.முத்துசாமி, இருவரும் எண்.186 மாரியம்மன் கோவில் தெரு, அயிலூர், பெரம்பலூர்.

– மனுதாரர்கள்

– எதிர் –

1.சி வெங்கடேசன் த/பெ. சின்னராஜி எண்:320/NA பிள்ளையார் கோவில் தெரு, சென்ன சமுத்திரம், செங்கம் வட்டம். திருவண்ணாமலை மாவட்டம் .606701.
2. கிளை மேலாளர் தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி எண்: 99/C 3–முதல் தளம், புது பஸ்நிலையம் எதிரில், பெரம்பலூர்.

– எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மனுதாரர் மேற்படி நம்பரில் எதிர்மனுதாரர்கள் மீது மோட்டார் வாகன விபத்து நஷ்டஈடு கோரி மனுதாக்கல் செய்து 1–ம் எதிர்மனுதாரருக்கு பலமுறை நோட்டீஸ் அனுப்பியும் சார்வு ஆகாத காரணத்தால்செய்தித்தாள் மூலம் விளம்பரம்செய்ய நீதிமன்றத்தில் உத்தரவு ஆகி வழக்கிற்கான வாய்த 02.03.2023 அன்று போடப்பட்டு உள்ளது. ஆகவே. 1ம் எதிர்மனுதாரர் மேற்படி வாய்தா தேதியான 02.03.2023 அன்று காலை 10.00 மணிக்கு பெரம்பலூர் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி கட்சி இருந்தால் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**P.V.SHANKAR, B.Sc.B.L.,**
வழக்கறிஞர், பெரம்பலூர்.

**Before the Motor Accident Claims Tribunal PDJ Perambalur**
**M.C.O.P. No. 229/2022**

1.சையத் உஸ்மான், த/பெ.சையத் இப்ராஹீம், எண்:151. அய்யனார் குளம் மேற்கு தெரு, பெண்ணாடம் (TP) கடலூர்,
2.பாத்திமா.பீ, க/பெ.சையத் உஸ்மான், எண்:20, வடக்கு தோப்பு தெரு, பெண்ணாடம்(TP) கடலூர்.

– மனுதாரர்கள்

– எதிர் –

1.சாகுல் ஹமீத், த/பெ.அப்துல் நத்தர்ஷீசைன், எண். 4784. அய்யனார் புரம், 2 வது தெரு, புதுக்கோட்டை 622001.
2.டிவிசனல் மேனேஜர், நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட், ஜே.கே பிளாஸா முதல்ளம், T.S.NO. 3622/27, 5 வது தெரு, பஸ்ஸா பிண்ட் அருகில், சாந்தநாதபுரம், புதுக்கோட்டை. 622001

– எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மனுதாரர் மேற்படி நம்பரில் எதிர்மனுதாரர்கள் மீது மோட்டார் வாகன விபத்து நஷ்டஈடு கோரி மனுதாக்கல் செய்து. 1.–ம் எதிர்மனுதாரருக்கு பலமுறை நோட்டீஸ் அனுப்பியும் சார்வு ஆகாத காரணத்தால் செய்தித்தாள் மூலம் விளம்பரம் செய்ய நீதிமன்றத்தில் உத்தரவு ஆகி வழக்கிற்கான வாய்தா 07.02.2023 அன்று போடப்பட்டு உள்ளது. ஆகவே 1 ம் எதிர்மனுதாரர் மேற்படி வாய்தா தேதியான 07.02:2023 அன்று காலை 10.00 மணிக்கு பெரம்பலூர் மாவட்ட PDJ நீதிமன்றத்தில் ஆஜராகி கட்சி இருந்தால் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**P.V.SHANKAR, B.Sc.B.L.,**
வழக்கறிஞர், பெரம்பலூர்.

**மேன்மைமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நீடாமங்கலம்**
**அ.வ.எண்.32/2022**

ஹாஜி முகம்மது சுல்தான். – வாதி

– எதிர் –

M.லைலாபானு, த/பெ.முஹம்மது தாவூது, 15,பள்ளிவாசல் தெரு, மாப்பிள்ளை குப்பம், நன்னிலம் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம். – 1–ம் பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி வாதிக்கும் 1–ம் பிரதிவாதியாகிய தங்களுக்கும் 26.08.2018–ல் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பிறகு இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் ஊர் ஜமாத்தில் வாதியும் தாங்களும் கடந்த 06.09.2020 முபாரா முறைப்படி திருமணம் கலைத்து விவாகரத்து உடன்படிக்கை ஏற்பட்டது. மேற்படி உடன்படிக்கை அடிப்படையில் மேற்படி திருமணத்தை வாதிக்கும் 1–ம் பிரதிவாதிக்கும் இடையே நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்ய விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு 23.02.2023–ல் வாய்தா கோரப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் தாங்களோ, வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபணை தெரிவிக்கலாம். தவறும்பட்சத்தில் தங்களுக்கு அசல் வழக்கில் ஆட்சேபணை இல்லை என்று ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

**ஜெ.பாலச்சந்தர், B.A.,LL.B.**
வழக்கறிஞர், திருவாரூர்.
செல். 96888 36616.

**மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈட்டு தீர்ப்பாயம், மன்னார்குடி, மாண்பமை சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**I.A.No. 1/2023 in M.C.O.P.No.42/2021**

1.லதா,
2.கார்த்திகேயன்
3.தினேஷ் –மனுதாரர்கள்

–எதிர்–

ஸ்ரீ கணேசா பஸ் டிராவல்ஸ் அதற்காக அதன் உரிமையாளர். 18, நல்லையா காம்ப்ளக்ஸ், ஸ்ரீனிவாசம் பிள்ளை சாலை, தஞ்சாவூர்–613001. –எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி அசல் மனு மோட்டார் வாகன விபத்து பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரால் எதிர்மனுதாரருக்கு பலமுறை நீதிமன்றம் மூலமாகவும், அஞ்சல் வழி மூலமாகவும் சம்மன் அனுப்பப்பட்டு, அனுப்பப்பட்ட சம்மனை வேண்டுமென்றே ஊரில் இருந்து கொண்டே பெற்றுக் கொள்ளாமல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்றே எதிர்மனுதாரர் தவிர்த்து வருகிறார். மேற்படி எதிர்மனுதாரருக்கு வழக்கில் சம்மன் சர்வ் செய்யும் பொருட்டு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய சமூகம் நீதிமன்றத்தார் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவிற்கினங்க எதிர்மனுதாரர் மேற்கண்ட வழக்கில் மேற்கண்ட நீதிமன்றத்தில் வருகின்ற 08.03.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி வழக்கில் ஆட்சேபணை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு மனுவில் ஏதும் ஆட்சேபணை இல்லை என்று மனுவில் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**S.விஜயன் B.A., B.L.,**
வழக்கறிஞர் & நோட்டரி, மன்னார்குடி

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நீடாமங்கலம்**
**O.S.No.94/2022**

மெஹரானா ...வாதி

–எதிர்–

நாகூர் கனி ...பிரதிவாதி

**அறிவிப்பு**

வாதிக்கும் பிரதிவாதிக்குமிடையே கடந்த 02.02.2020–ல் விவாகரத்து ஏற்பட்டதன் அடிப்படையில் திருமண உறவு முறை முடிவுக்கு வந்துவிட்டது என விளம்புகை செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்து பிரதிவாதியின் ஆஜருக்காக எதிர்வரும் 23.02.2023 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. பிரதிவாதி 23.02.2023 அன்று காலை 10.30 மணிக்கு நேரிலோ, வழக்கறிஞர் மூலமோ மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரத்திற்கு இந்த பொது அறிவிப்பு தரப்படுகிறது.

**S.L.ஹுசைன் முகம்மது B.Sc., B.L.,**
வழக்கறிஞர், திருவாரூர்

**முதன்மை சார்பு நீதிமன்றம், கும்பகோணம்**
**O.S.No.177/2022**

கனரா வங்கி வல்லம் கிளை சார்பாக அதன் முதன்மை மேலாளர் – வாதி

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் தாலுக்கா, உள்ளிக்கடை அஞ்சல், தெற்கு முதலியார் தெருவில் வசிக்கும் முருகேசன் குமாரர் M.எழில்வசந்தன் – 2ம் பிரதிவாதி

அறிவிப்பு

வாதி வங்கிக்கு பிரதிவாதிகளிடமிருந்து வரவேண்டிய கடன் பாக்கிக்காக பிரதிவாதிகள் பேரில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அதில் 2ம் பிரதிவாதிக்கு சம்மன் அனுப்பியதில் சர்வாகாததால் பேப்பரில் விளம்பரம் செய்ய உத்தரவாகி வாய்தா 03.03.2023 தேதியில் போடப்பட்டுள்ளது. ஆட்சேபணையிருப்பின் அன்று காலை 10.30 மணிக்கு ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் வழக்கானது ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**ஆர்.முகமதுஷாஜஹான், பி.காம்.எல்.எல்.பி.**
வாதி வழக்கறிஞர்.

# அண்ணா நினைவு தினம்: பெரியகுளத்தில் தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை



தேனி பிப் 4

தேனி மாவட்டம், பெரியகுளத்தில் பேரறிஞரின் 54வது நினைவு தினத்தை முன்னிட்டு தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்செல்வன் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார் முன்னிலையில் திமுகவினர் மூன்றாந்தலில் இருந்து ஊர்வலமாக வந்து பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தேனி மாவட்டம், பெரியகுளத்தில் பேரறிஞர் அண்ணாவின் 54வது நினைவு தினத்தை முன்னிட்டு தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்செல்வன் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார் முன்னிலையில் மாவட்ட அவைத்தலைவர் செல்லப்பாண்டியன், நகர செயலாளர் முகமது இலியாஸ், வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன், நகர்மன்ற தலைவர் சுமிதாசிவக்குமார், நகர அவைத்தலைவர் வெங்கடாசலம், நகர பொருளாளர் சுந்தரபாண்டியன், மாவட்ட பிரதிநிதிகள் செந்தில்குமார், ராஜபாண்டி உள்ளிட்ட நிர்வாகிகள், தொண்டர்கள் மூன்றாந்தல் பகுதியிலிருந்து 18ம் ரஸ்தா, தண்டுபாளையம் மெயின் ரோடு, அம்பேத்கர் சிலை உள்ளிட்ட பகுதி வழியாக ஊர்வலமாக வந்து பழைய பேருந்து நிலையத்தில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதனை தொடர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

# எடப்பாடி பழனிசாமி வருகையை முன்னிட்டு பரமக்குடியில் ஆர்.பி. உதயகுமார் ஆய்வு



பரமக்குடி பிப் 04 :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் டாக்டர் எஸ். முத்தையாவின் புதல்வி திருமண விழா நாளை 5-ம் தேதி பரமக்குடி ஆயிர வைசிய மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது. இந்த திருமண விழாவில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி கலந்து கொண்டு திருமணத்தை நடத்தி வைக்க உள்ளார்.

இதற்கான முன்னேற்பாடுகள் தீவிரமாக நடந்து வரும் நிலையில் நேற்று பரமக்குடிக்கு வருகை தந்த முன்னாள் அமைச்சர் ஆர். பி.உதயகுமார் பள்ளி வளாகத்தில் நடைபெறும் முன்னேற்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

உடன் மாவட்ட செயலாளர் எம்.ஏ.முனியசாமி, நகர செயலாளர் ஜமால், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். முத்தையா, வேந்தோணி ஒன்றிய கவுன்சிலர் சுப்பிரமணியன், மாவட்ட மாணவர் அணி செயலாளர் செந்தில்குமார், நகர் அம்மா பேரவை செயலாளர் வடமலையான், நகர்மன்ற உறுப்பினர் கண்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# வாடிப்பட்டியில் அண்ணா சிலைக்கு ஓ.பி.எஸ். தரப்பினர் மாலை அணிவிப்பு



வாடிப்பட்டி.பிப். 4

மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் அறிஞர் அண்ணா அவர்களின் 54 வது நினைவு நாளை முன்னிட்டு அதிமுக ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் தமிழக முதல்வருமான மாண்புமிகு ஐயா ஓ. பன்னீர் செல்வம் அவர்கள் ஆணைக்கிணங்க மாவட்டச் செயலாளர் திரு கே .முருகேசன் அவர்கள் ஆலோசனையின் பேரில் மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு அலங்காநல்லூர் ஒன்றிய செயலாளர் சேது சீனிவாசன், தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் திரவியம், ஜோதிமுருகன், ஆகியோர் முன்னிலையில் வாடிப்பட்டி முன்னாள் யூனியன் சேர்மன் துரை நடராஜன், கலந்துகொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் நகரச் செயலாளர்கள் வெள்ளை கெங்கை, பாலமேடு சேகர், நவீன், ராமசாமி, மற்றும் மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் அய்யாவு, இலக்கிய அணி வடக்கு மாவட்ட செயலாளர் சேகர், அம்மா பேரவை செயலாளர் நடராஜன், கிளைச் செயலாளர் கருப்பணன், தகவல் தொழில்நுட்ப அணி திருப்பதி, மாவட்ட விவசாய அணி செயலாளர் கருப்பட்டி செந்தில், இரும்பாடி ஊராட்சி செயலாளர் ஈஸ்வரன், குட்லாடம்பட்டி ராஜேந்திரன், உள்ளிட்ட நிர்வாகிகளும் பலர் கலந்து கொண்டனர்

# வத்திராயிருப்பு பள்ளி ஆண்டு விழா

விருதுநகர்.பிப்.4.

வத்திராயிருப்பு ரங்காராவ் லயன்ஸ் பெண்கள் மெட்ரிகுலேஷன் பள்ளி, மகாராஜபுரம் மேல்நிலைப் பள்ளியில் 40 ஆம் ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா நடைபெற்றது.

விருதுநகர் மணிகண்டன் மெட்ரிக் பள்ளி நிறுவனர் தங்கராஜ் தலைமை வகித்து விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். ஆண்டு விழாவில் சிவகாசி எம்.எல்.ஏ. அசோகன் தலைமை வகித்தார். முன்னாள் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் போஸ் முன்னிலை வகித்தார்.

பள்ளி தலைவர் சுந்தரராஜ பெருமாள் அனைவரையும் வரவேற்று பேசினார். அரிமா சங்க வட்டார தலைவர் ஆரியன் மதுரம் சிறப்புரையாற்றினார். மேல்நிலைப்பள்ளி முதல்வர் இளையராஜா, பெண்கள் பள்ளி முதல்வர் ராஜேஸ்வரி ஆண்டறிக்கை வாசித்தனர்.

மாணவர்களுக்கு பள்ளித் தாளாளர் விஜயகுமார், டாக்டர் பால்சாமி பரிசுகள் வழங்கினர். நிறைவாக சங்க நிர்வாகிகள் சுப்பையா கூடலிங்கம் நன்றி கூறினார்

# கீரனூரில் விழிப்புணர்வு பேரணி



ஒட்டன்சத்திரம்.பிப்.4.

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் வட்டம் எஸ்.ஆர்.எஸ். வேளாண்மை மற்றும் தொழில் நுட்பக்கல்லூரியில், இறுதியாண்டு பயிலும் மாணவர்கள் சா.அருண், ஆசிஷ் ராஜ், பாலு பிரகாஷ், தர்மேந்திரன், ஹரிகரன், ஹரிஷ் குமார், ஜீவா நந்தம், ஜெப்பிரி ரசல், முருகந் கிருஷ்ணன், முத்து முருகன் உள்ளிட்ட மாணவர்கள் கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத்திட்டத்தின் படிஉலக சதுப்புநில தினத்தை முன்னிட்டு வேளாண் அலுவலர் அப்துல் காதர் தலைமையில் கல்லூரி மாணவர்கள் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள கீரனூரில் பேரணி நடத்தினர்

## அகில இந்திய அளவிலான கராத்தே போட்டி:

# ராமநாதபுரம் மாணவர்கள் தங்கம் வென்று சாதனை



முதுகுளத்தூர், பிப். 4

கோவா மாநிலம் வாஸ்கோடகாமாவில் 28:01:23 வைத்து நடைபெற்ற அகில இந்திய அளவிலான கராத்தே போட்டியில் தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா, கோவா ஆகிய மாநிலங்களில் இருந்து மாணவர்கள் கலந்து கொண்டனர் . இப்போட்டியின் தலைமை நடுவராக சோபுக்காய் கோஜுரியு கராத்தே டூ- இந்திய தலைமை பயிற்சியாளர் மற்றும் தொழில் நுட்ப இயக்குனர் ரென்ஷி. சுரேஷ்குமார் செயல்பட்டார்.

இதில் தமிழ்நாடு சார்பாக ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியை சேர்ந்த மாணவர்கள் மாவட்ட கராத்தே பயிற்சியாளர் முத்துராஜா தலைமையில் பங்கேற்றனர். இதில் கட்டா பிரிவில் முத்துராஜா தங்க பதக்கத்தையும் ஆதித்யா இஷாம், முகேஷ், ஜெகவர் , வெள்ளிப் பதக்கத்தையும் ஹனிஷ் ஜோஸ்வா, நவினேஷ், தமிழரசன் வெண்கல பதக்கத்தையும் சண்டை பிரிவில் முத்துராஜா, ஷாம், நவினேஷ் தங்க பதக்கத்தையும் மேலும் 5 மாணவர்கள் வெண்கல பதக்கத்தையும் வென்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்தனர் வெற்றி பெற்ற மாணவர்களை ராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட செயலாள ருமான காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் மற்றும் பெற்றோர்கள் பாராட்டினர்..

# தமிழ்நாட்டில் புதியவர்களிடமிருந்து வேலை விண்ணப்பங்களில் 2.5 மடங்கு அதிகரிப்பு

கோவை, பிப் 04-

இந்தியாவின்மிகப்பெரிய வேலை மற்றும்தொழில்முறை நெட்வொர்க்கிங்தளமான அப்னா.கோ, 2022 இல்தமிழ்நாட்டில் உள்ளபுதியவர்களிடமிருந்து வேலைவிண்ணப்பங்களில், 2.5 மடங்கு அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. உலகெங்கிலும் பெரும் பணி நீக்கங்கள் இருந்த போதிலும், இந்தியாவின்வலுவான பொருளாதார வேகம் மற்றும்மீட்சி ஆகியவை பணியமர்த்தல் எண்ணிக்கையின் வளர்ச்சியில் நன்குபிரதிபலிக்கின்றன. நாடு முழுவதும் உள்ள நிறுவனங்கள் புதிய கருத்துக்கள் மற்றும்யோசனைகளுடன் தங்கள் வணிகத்தைஉருவாக்க புதிய பட்டதாரிகளை கோரிவருகின்றன. அப்னாவின் கூற்றுப்படி, சென்னை, கோயம்புத்தூர் மற்றும்மதுரை போன்ற நகரங்களில் வணிகமேம்பாடு, டெலிகாலிங் மற்றும் களவிற்பனை போன்ற பல்வேறுபதவிகளில் புதியவர்களுக்கானவேலைவாய்ப்புக்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது.

2022 ஆம்ஆண்டில், சென்னை மட்டும் 2 மில்லியனுக்கும் அதிகமான வேலைவிண்ணப்பங்களை புதியவர்களிடமிருந்து பெற்றுள்ளது. 2021 ஆம் ஆண்டை விட 2022 ஆம்ஆண்டில் 1 மில்லியனுக்கும் அதிகமான புதிய பயனர்கள் (210 சதவீதம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பு) அப்னாவில் பதிவுசெய்துதை இந்த மாநிலம் கண்டுள்ளது. கூடுதலாக, மாநிலத்தில் உள்ள பெண்கள் எல்லா வாய்ப்புகளையும்பயன்படுத்திக் கொள்கிறார்கள் மற்றும்ஆண்களை விட மிகவும் பின்தங்கியிருக்கவில்லை. சுவாரஸ்யமாக, 2022 ஆம் ஆண்டில், அப்னாவும் பெண்களிடமிருந்து 1.8 மில்லியன் வேலைவிண்ணப்பங்களைப் பதிவுசெய்துள்ளது, இது கடந்த ஆண்டை விடபங்கேற்பில் 3 மடங்கு அதிகரித்துள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள பெண்கள், ஆசிரியர், மனித வளம், கணக்கியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம்உள்ளிட்ட பல்வேறு வேலைகளில் ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

# கவனத்துடன்சாப்பிடுவதற்கும் குடும்பஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளிப்பதற்கும்ஒரு கைப்பிடி பாதாம்

சென்னை, பிப் 04-

கவனத்துடன் சாப்பிடுவதன்முக்கியத்துவத்தை நுகர்வோருக்குஉணர்த்தும் நோக்கத்துடன், கலிபோர்னியாவின் பாதாம் வாரியம் நேற்று சிறந்த உணவுக்குமுன்னுரிமை அளிப்பது முழுமையான குடும்ப ஆரோக்கியத்திற்கான புதியமந்திரம் என்ற அமர்வை நடத்தியது.நமது குடும்பங்களுக்கும் நமக்கும்முழுமையான ஆரோக்கியத்தைஉறுதிப்படுத்த ஆரோக்கியமானஉணவுகளை உண்பதன் முக்கியத்துவம்குறித்து கலந்துரையாடல் கவனம்செலுத்தியது. அமர்வு நன்குஅறியப்பட்டதாக இடம்பெற்றது புகழ்பெற்ற இந்திய தொலைக்காட்சி மற்றும் திரைப்பட நடிகை, நிஷாகணேஷ்,அத்துடன் ஷீலாகிருஷ்ணசாமி, ஊட்டச்சத்து நிபுணர்மற்றும் ஆரோக்கிய ஆலோசகர், மற்றும் RJ ஸ்ருதியால்வழிநடத்தப்பட்டது.

இது குறித்து ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியஆலோசகர், ஷீலா கிருஷ்ணசாமி கூறுகையில், நிச்சயமாக சாப்பிடுவதைப் பயிற்சிசெய்வது முக்கியம், அதாவது ஒருவர்எதை உட்கொள்கிறார் என்பதைப்பற்றிய விழிப்புணர்வை. கவனத்துடன்சுய விழிப்புணர்வை மேம்படுத்தும்தலையீடு நுட்பங்கள் கவலை மற்றும்மனச்சோர்வு, உணவுக் கோளாறுகள்,உணவு பசி மற்றும் எடை இழப்புஉள்ளிட்ட நல்வாழ்வைமேம்படுத்துகின்றன என்று ஆய்வுகள்தெரிவிக்கின்றன. லண்டன் கிங்ஸ் கல்லூரி ஆராய்ச்சியாளர்கள் நடத்தியஆய்வில், மன அழுத்தத்திற்குபதிலளிக்கும் விதமாக பாதாம்சிற்றுண்டி இதய துடிப்பு மாறுபாட்டைமேம்படுத்த வழிவகுத்தது. பாதாம் புரதம், வைட்டமின் ஈ, மெக்னீசியம், ரிபோஃப்ளேவின், துத்தநாகம் போன்றஊட்டச்சத்துக்களின் மூலமாகும். மேலும்நல்ல கொழுப்புகள் மூலம் ஆற்றலைவழங்குவதாக அறியப்படுகிறது, இது ஆரோக்கியமான மற்றும் சுவையானவிருந்தாக அமைகிறது என்று கூறினார்.

## மேலவளவு முருகேசன் கொலை வழக்கு:

# 13 பேரின் முன்கூட்டிய விடுதலையை ரத்து செய்யகோரிய மனுக்கள் தள்ளுபடி

## ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவு

மதுரை, பிப். 04-

மதுரை மாவட்டம் மேலவளவு பஞ்சாயத்து தலைவர் முருகேசன் உள்ளிட்ட 6 பேர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற 13 பேரின் முன்கூட்டியே விடுதலையை ரத்து செய்யகோரிய மனுக்களை உயர்நீதிமன்ற மதுரை கிளை தள்ளுபடி செய்துள்ளது.

மேலவளவு பஞ்சாயத்து தலைவர் முருகேசன் உள்ளிட்ட 6 பேர் 1997ல் படுகொலை செய்யப்பட்டனர். இந்த வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற 13 பேர் பொது மன்னிப்பு அடிப்படையில் கடந்த 2019ம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டனர். இவர்களின் விடுதலையை எதிர்த்து வக்கீல் ரத்தினம் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இதேபோல் கொலையானவர்களின் மனைவி மற்றும் தாய் தரப்பிலும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த மனுக்களை விசாரித்த நீதிபதிகள் ஜெயசந்திரன், சுந்தர் மோகன் அமர்வு, அனைத்து தரப்பு வாதங்களும் முடிந்த நிலையில், தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்திருந்தனர். இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள், 13 பேரின் முன்கூட்டிய விடுதலை குறித்து அனைத்து தரப்பு சூழலையும் பரிசீலனை செய்த பிறகே தமிழ்நாடு அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. எனவே இதில் தலையிட விரும்பவில்லை என கூறி மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.



அண்ணாவின் நினைவு தினத்தையொட்டி முதுகுளத்தூரில் அவரது திருவுருவப் படத்திற்கு மத்திய ஒன்றிய செயலாளர் செந்தில் குமார் தலைமையில் கிழக்கு ஒன்றிய செயலாளர் சேதுராமன், நகர செயலாளர் தூரிமுருகேசன், ஒன்றிய கவுன்சிலர் கலைசெல்வி ராஜசேகர் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அருகில் ஊராட்சி மன்ற தலைவர் கதிரேசன், கந்தன் முருகேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



அண்ணாவின் நினைவு நாளை முன்னிட்டு திண்டுக்கல் மேற்கு மாவட்டம் குஜிலியம்பாறையில் அ.தி.மு.க. ஒன்றிய செயலாளர் மலர்வண்ணன் தலைமையில் பேரூராட்சிசெயலாளர்மணிமாறன்,.ஊராட்சிசெயலாளர்முருகன்,நிர்வாகிகள்முனியாண்டி. கருப்பசாமி மின்னல் குமரேசன். கோபி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# கப்பலூர் ஆனைமலைஸ் நிறுவனத்தில் புதியவகை டொயோட்டா இன்னோவா ஹைகிராஸ் கார் அறிமுகம்

திருமங்கலம்.பிப்.04.



மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகேயுள்ள கப்பலூரில் செயல்பட்டு வரும் ஆனைமலைஸ் டொயோட்டா நிறுவனத்தில் பெட்ரோல் மற்றும் செல்ப் சார்ஜிங் ஹைபிரிட் தொழில் நுட்பத்துடன் கூடிய பெட்ரோல் என இருவிதமான இன்ஜின் வகைகள் கொண்ட அதிநவீன டொயோட்டா இன்னோவா ஹைகிராஸ் கார் நேற்று வாடிக்கையாளர்கள் முன்னிலையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

கார் உற்பத்தி சந்தையில் இந்தியாவின் முன்னணியில் திகழ்ந்திடும் டொயோட்டா நிறுவனம் தற்போது டொயோட்டா இன்னோவா ஹைகிராஸ் எனும் புதிய வகை காரினை அறிமுகம் செய்துள்ளது.பெரும் எதிர்பார்ப்பிற்கு மத்தியில் 23.4கி.மீ மைலேஜ்,பெட்ரோல் மற்றும் செல்ப் சார்ஜிங் ஹைபிரிட் தொழில்நுட்பத்துடன் கூடிய பெட்ரோல் என இரு விதமான இன்ஜின் தேர்வுகளை கொண்டு அதிநவீன வசதிகளுடன் ஏழு விதமான நிறங்கள் மற்றும் எட்டு விதமான வேரியண்ட் மாடல்களில் ரூ.18.30லட்சம் ஆரம்ப விலையிலும் பிரீமியம் மாடல் ரூ.28.97 லட்சத்திலும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஹைகிராஸ் மாடலில் 5வது தலைமுறையைச் சேர்ந்த இந்த காரின் அறிமுக விழா கப்பலூரில் செயல்பட்டு வரும் ஆனைமலைஸ் டொயோட்டா நிறுவனத்தில் நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது.அப்போது டொயோட்டாவின் புதிய வெளியீடான இன்னோவா ஹைகிராஸ் காரினை மாநில ஜி.எஸ்.டி இன்டெலிஜென்ஸ் பிரிவின் இணை ஆணையர் திருமதி.இந்திரா அனைவருக்கும் அறிமுகம் செய்து வைத்து விற்பனைக்கான முன்பதிவினை குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.இந்த நிகழ்ச்சியில்ஆனைமலைஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஆர்.சேதுராஜன்,உதவி பொது மேலாளர் ஆர். கார்த்திகேயன், விற்பனை மேலாளர் பி.வினோத்குமார், மார்க்கெட்டிங் மேலாளர் என்.சண்முகம், மேலாளர் மயில் ஆகியோர் சிறப்புடன் செய்திருந்தனர்.

# நத்தத்தில் விபத்தில் இறந்த பள்ளி மாணவன் குடும்பத்திற்கு நிதிஉதவி

நத்தம், பிப், 4



திண்டுக்கல் மாவட்டம் நத்தம் கர்ணம் தெருவை சேர்ந்தவர் பொன்னழகப்பன். இவரது மகன் குருபா. இவர் நத்தம் ராம்சன்ஸ் பிரைமரி பள்ளியில் 3-ம் வகுப்பு படித்து வந்தான். இந்நிலையில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 10-ம் தேதி விபத்தில் சிக்கி பலியானான். இந்நிலையில் ராம்சன்ஸ் பள்ளி நிர்வாகத்தின் சார்பில் அங்கு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இன்சூரன்ஸ் செய்யப்பட்டுள்ளது.இதையொட்டி நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி சார்பில் பள்ளி வளாகத்தில் இறந்த மாணவன் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இதற்கு பள்ளி தாளாளர் ராமசாமி தலைமை தாங்கினார். இன்சூரன்ஸ் கம்பெனி மண்டல முதன்மை கோட்ட மேலாளர் கார்த்திகேயன் கலந்து கொண்டு மாணவனின் பெற்றோர்களுக்கு 1 லட்சம் ரூபாய் நிதி உதவி தொகையை வழங்கினார். இதில் முதுநிலை உதவியாளர் கௌதம், முகவர் வீர பாண்டி உள்ளிட்ட பள்ளி ஆசிரிய, ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### 4 போட்டிகள் கொண்ட

# ஆஸி.க்கு எதிரான டெஸ்ட் தொடர்: நாக்பூரில் இந்திய வீரர்கள் பயிற்சி



**நாக்பூர், பிப். 04-**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் அடுத்த வாரம் தொடங்கவுள்ள நிலையில் இந்திய வீரர்கள் நேற்று முதல் தங்களுடைய பயிற்சியைத் தொடங்கினர்.

**சுற்றுப்பயணம்....**

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலியா 4 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதலில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான பார்டர் கவாஸ்கர் டிராபி டெஸ்ட் தொடரில் இந்திய அணி விளையாடுகிறது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

**இந்திய டெஸ்ட் அணி:**

ரோஹித் சர்மா, செட்டேஷ்வர் புஜாரா, ஷ்ரேயாஸ் ஐயர், விராட் கோலி, ஷுப்மன் கில், ரவிச்சந்திரன் அஷ்வின், அக்சர் படேல், கே.எல். ராகுல், கே.எஸ். பாரத், முகமது ஷமி, குல்தீப் யாதவ், ரவீந்திர ஜடேஜா, உமேஷ் யாதவ், முகமது சிராஜ், இஷான் கிஷன், ஜெய்தேவ் உனட்கட், சூர்யகுமார் யாதவ். ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

**காயத்தால் விலகல்...**

இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்ட்டி வரும் 9-ம் தேதி தொடங்குகிறது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக பும்ரா ஐசிசி உலகக் கோப்பையில் பங்கேற்கவில்லை. அதன் பிறகு இலங்கைக்கு எதிரான தொடரில் அவர் இடம் பெற்றிருந்தார். அதன் பிறகு திடீரென்று தொடரிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டார். இதேபோன்று ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் 2 டெஸ்ட் போட்டிகளிலும் அவர் இடம் பெறவில்லை.

**இடம்பெறுவார்...**

முதுகு வலி காரணமாக இதுவரையில் உடற்பயிற்சிகள் செய்து வந்த பும்ரா தற்போது பந்து வீச தொடங்கியிருக்கிறார். தேசிய கிரிக்கெட் அகாடமியில் வலைபயிற்சியில் பும்ரா ஈடுப்பட்டிருந்த போது அவருக்கு எந்த வித கஷ்டமும் நேரவில்லை என்று கூறப்படுகிறது. இதனால், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3-வது மற்றும் 4-வது டெஸ்ட் போட்டிகளில் அவர் இடம் பெறுவார் என்று தெரிகிறது.

**பெங்களூரில்...**

இதற்கிடையே நாக்பூரில் நடைபெறும் முதல் டெஸ்ட் போட்டிகான ஆரம்பக்கட்டப் பயிற்சிகளை பெங்களூரில் மேற்கொண்டு வருகிறது ஆஸ்திரேலிய அணி. சுழற்பந்துவீச்சுக்குச் சாதகமான ஆடுகளங்களில் பயிற்சி எடுத்து வருகிறார்கள். அஸ்வினைப் போல பந்துவீச்சு முறையைக் கொண்டுள்ள குஜராத்தைச் சேர்ந்த 21 வயது மஹீஸை வலைப்பயிற்சியில் ஈடுபடுத்தியுள்ளார்கள். இந்நிலையில் இந்திய வீரர்கள் நாக்பூரில் நேற்று வலைப்பயிற்சியைத் தொடங்கியுள்ளார்கள். இதற்கான புகைப்படங்களை பிசிசிஐ வெளியிட்டுள்ளது.

### இந்தியா - ஆஸி., டெஸ்ட் தொடர்:

# கடைசி போட்டியை நேரில் காண்கிறார் பிரதமர் மோடி..?

**நாக்பூர், பிப். 04-**



இந்தியா-ஆஸி., டெஸ்ட் தொடர் கடைசி போட்டியை நேரில் காண்கிறார் பிரதமர் மோடி என்ற தகவல் வெளியாகியுள்ளது.

**3 நகரங்களிலும்...**

இந்தியா-ஆஸ்திரேலியா டெஸ்ட் தொடரின் கடைசி போட்டியை பிரதமர் மோடி நேரில் காண இருப்பதாக தகவல். 4 டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலிய அணி இந்தியா வந்துள்ளது. இந்தியா-ஆஸ்திரேலியா அணிகள் மோதும் முதல் டெஸ்ட் வருகிற 9-ந்தேதி நாக்பூரில் தொடங்குகிறது. 2-வது டெஸ்ட் பிப்ரவரி 17-21 வரை டெல்லியிலும், 3-வது டெஸ்ட் மார்ச் 1 முதல் 5 வரை தர்மசாலாவிலும், 4-வது மற்றும் கடைசி டெஸ்ட் மார்ச் 9 முதல் 13 வரை அகமதாபாத்திலும் நடைபெற உள்ளது. அதைத் தொடர்ந்து ஒருநாள் போட்டிகள் மார்ச் 17, 19 மற்றும் 22-ந் தேதிகளில் மும்பை, விசாகப்பட்டினம், சென்னை ஆகிய இடங்களில் நடக்கிறது.

**படங்கள் வெளியீடு...**

டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலில் ஆஸ்திரேலிய அணி முதலிடத்திலும், இந்திய அணி 2வது இடத்திலும் உள்ளது. இந்தியா இறுதி சுற்றுக்கு முன்னேற வேண்டும் என்றால் ஆஸ்திரேலியாவிடம் வெற்றி பெற வேண்டும். இதற்காக இந்திய அணி நாக்பூரிலும், ஆஸ்திரேலிய அணி பெங்களூருவிலும் பயிற்சி முகாம்களை தொடங்கிவிட்டனர். வீரர்கள் பயிற்சியில் ஈடுபடும் புகைப்படத்தை பிசிசிஐ வெளியிட்டுள்ளது. இந்நிலையில் இத்தொடர் குறித்து புதிய தகவல் வெளியாகி உள்ளது.

**கடைசி டெஸ்ட்...**

அதாவது இரு அணிகளும் மோதும் கடைசி டெஸ்ட் போட்டியை பிரதமர் நரேந்திர மோடி நேரில் கண்டுகளிக்கவுள்ளார். இவருடன் சேர்ந்து ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீசும் போட்டியை நேரில் காண உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அகமதாபாத் மைதானத்திற்கு பிரதமர் நரேந்திர மோடியின் பெயர் சூட்டப்பட்டதில் இருந்து ஒருமுறை கூட அவர் போட்டியை காணவரவில்லை. முதல்முறையாக இந்த பிரமாண்ட போட்டியை காண வருகை தர உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

### ரஞ்சி கோப்பை கிரிக்கெட்:

# அரையிறுதிக்கு மத்திய பிரதேசம், பெங்கால், கர்நாடகம் முன்னேற்றம்



**பெங்களூர், பிப். 04-**

ரஞ்சி கோப்பைப் போட்டியில் பெங்கால், கர்நாடகம், மத்திய பிரதேசம் ஆகிய அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

**கர்நாடக அணி...**

பெங்களூரில் நடைபெற்ற காலிறுதியில் உத்தரகண்ட் அணியை ஒரு இன்னிங்ஸ் மற்றும் 281 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது கர்நாடகம் அணி. 161 ரன்களும் 3 விக்கெட்டுகளும் எடுத்த ஷ்ரேயஸ் கோபால், ஆட்ட நாயகனாகத் தேர்வானார். கர்நாடகம் அணி முதல் இன்னிங்ஸில் 162.5 ஓவர்களில் 606 ரன்கள் குவித்ததால் எளிதான வெற்றி கிடைத்தது. உத்தரகண்ட் அணி இரு இன்னிங்ஸிலும் 116, 209 ரன்கள் எடுத்தது.

**பெங்கால் - ம.பி. அணி...**

கொல்கத்தா ஈடன் கார்டன்ஸில் நடைபெற்ற காலிறுதியில் ஜார்கண்ட் அணியை 9 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது பெங்கால் அணி. ஜார்கண்ட் அணி இரு இன்னிங்ஸிலும் 173, 221 ரன்கள் எடுத்துத் தோல்வியடைந்தது. பெங்கால் அணி முதல் இன்னிங்ஸில் 328 ரன்களும் 2-வது இன்னிங்ஸில் 69/1 என எடுத்து வெற்றி பெற்றது. 6 விக்கெட்டுகள் எடுத்த ஆகாஷ் தீப், ஆட்ட நாயகனாகத் தேர்வானார். .ஆந்திராவுக்கு எதிரான ஆட்டத்தில் யாஷ் துபாய், ராஜாட் படிகர், அதிரடி ஆட்டத்தில் மத்திய பிரதேசம் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# 2007 டி20 உலகக் கோப்பை ஹீரோ ஜோகிந்தர் ஓய்வு..!

கடந்த 2007-ல் நடைபெற்ற டி20 உலகக் கோப்பை தொடரை வென்ற இந்திய அணியில் விளையாடிய பந்து வீச்சாளர் ஜோகிந்தர் சர்மா, அனைத்து பார்மெட் கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 2007 டி20 உலகக் கோப்பையின் இறுதிப் போட்டியில் அவர் வீசிய அந்த கடைசி ஓவர் ஒவ்வொரு இந்திய கிரிக்கெட் ரசிகர் நெஞ்சிலும் மறக்க முடியாத தருணமாக என்றென்றும் இருக்கும்.



கடைசி ஓவரில் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு 13 ரன்கள் தேவைப்பட்டது. அப்போது ஓவரை வீசும் பொறுப்பை கேப்டன் டோனி, ஜோகிந்தர் சர்மா வசம் ஒப்படைத்தார். Wide வீசி ஓவரை துவங்கினார். இரண்டாவது பந்தில் மிஸ்பா-உல்-ஹக் சிக்ஸர் விளாசி இருந்தார். மூன்றாவது பந்தில் ஸ்கூப் ஆடி பைன்-லெக் திசையில் கேட்ச் ஸ்ரீசாந்த் வசம் கேட்ச் கொடுத்து அவுட் ஆகியிருப்பார் மிஸ்பா. அதன் மூலம் இந்திய அணி 5 ரன்கள் வித்தியாசத்தில் உலகக் கோப்பையை வென்று அசத்தி இருக்கும். அதன் மூலம் ஜோகிந்தர் சர்மா பிரபலமானார்.

# சி.எஸ்.கே. ஆல்ரவுண்டர்: டெஸ்ட் அணியில் சேர்ப்பு

ஐபிஎல் 2023 போட்டிக்கான வீரர்கள் ஏலத்தில் நியூசிலாந்து ஆல்ரவுண்டர் கைல் ஜேமிசனை ரூ. 1 கோடிக்குத் தேர்வு செய்தது சென்னை சூப்பர் கிங்ஸ் அணி. (2021-ல் ஆர்சிபி அணி, ரூ. 15 கோடிக்கு ஜேமிசனைத் தேர்வு செய்தது.) கடந்த வருடம் ஜூன் மாதம் இங்கிலாந்துச் சுற்றுப்பயணத்தின்போது ஜேமிசனுக்கு முதுகில் காயம் ஏற்பட்டது. அன்று முதல் அவர் சர்வதேச ஆட்டங்கள் எதிலும் விளையாடவில்லை. இதனால் ஜேமிசனை ஐபிஎல் ஏலத்தில் தேர்வு செய்ய சிஎஸ்கேவைத் தவிர வேறு எந்த அணியும் ஆர்வம் செலுத்தவில்லை.



காயத்திலிருந்து ஜேமிசன் மீண்டுவிட்டார், மீண்டும் விளையாட ஆர்வமாக உள்ளார் என்று பயிற்சியாளர் ஃபிளெமிங்கிடமிருந்து எங்களுக்குத் தகவல் வந்தது. அதனால் தேர்வு செய்தோம் என்று ஜேமிசனின் தேர்வு குறித்து விளக்கம் அளித்தார் சிஎஸ்கே தலைமைச் செயல் அதிகாரி காசி விஸ்வநாதன். ஜனவரி முதல் நியூசிலாந்தில் உள்ளூர் போட்டிகளில் விளையாடி வந்த ஜேமிசன், தற்போது சொந்த மண்ணில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்குத் தேர்வாகியுள்ளார்.

# பாக்., அணி பயிற்சியாளராக முன்னாள் வீரர் யாசித் அராபத்

பாகிஸ்தான் அணியின் இயக்குநராக மிக்கி ஆர்துர் விரைவில் நியமிக்கப்படவுள்ளார். அவர் அணியில் இல்லாதபோது தற்காலிகப் பயிற்சியாளராக யாசிர் அராஃபத் செயல்படுவார் எனத் தெரிகிறது. இங்கிலாந்தின் கவுன்டி அணி மற்றும் ஹாங்காங் அணி ஆகியவற்றின் பயிற்சியாளராக யாசிர் அராஃபத் பணியாற்றியுள்ளார். இங்கிலாந்தில் லெவல் 4 பயிற்சியாளர் பாடத்திட்டத்திலும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

டெர்பிஷைர் அணியில் மிக்கி ஆர்துர் பணியாற்றி வருவதால் பாகிஸ்தான் அணியின் முழு நேரப் பயிற்சியாளராகப் பணியாற்றக் கூடிய வாய்ப்பை மறுத்து விட்டார். இதையடுத்து பாகிஸ்தான் அணியின் இயக்குநராக நியமிக்கப்படவுள்ளார். ஒருநாள் உலகக் கோப்பை, பாகிஸ்தான் அணியின் ஆஸ்திரேலியச் சுற்றுப்பயணம் ஆகியவற்றில் பாகிஸ்தான் அணிக்கு உறுதுணையாக மிக்கி ஆர்துர் இருப்பார் என்று கூறப்படுகிறது.

# வெஸ்ட் இண்டீஸ் - ஜிம்பாப்வே முதல் டெஸ்ட் இன்று தொடக்கம்



வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 2 டெஸ்ட் போட்டி தொடரில் முதல் டெஸ்ட் புலவாயோவில் இன்று (4-ந்தேதி) தொடங்குகிறது. பிராத்வெயிட் தலைமையிலான வெஸ்ட் இண்டீஸ் அணி வெற்றியுடன் கணக்கை தொடங்கும் ஆர்வத்தில் இருக்கிறது.

அந்த அணி கடந்த டிசம்பரில் ஆஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் தொடரை 0-2 என்ற கணக்கில் இழந்து இருந்தது. ஜிம்பாப்வே அணி கடைசியாக 2021-ம் ஆண்டு ஜூலை மாதம் சொந்த மண்ணில் வங்காளதேசத்திடம் தோல்வியை தழுவி இருந்தது. இரு அணிகளும் 10 டெஸ்டில் விளையாடி உள்ளன. இதில் வெஸ்ட்இண்டீஸ் 7-ல் வெற்றி பெற்றுள்ளது. 3 போட்டி டிரா ஆனது. ஜிம்பாப்வே முதல் முறையாக வெஸ்ட் இண்டீசை வீழ்த்தும் வேட்கையில் இருக்கிறது.

# தமிழகத்தில் 5 ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்

**சென்னை, பிப். 04-**

தமிழகத்தில் 5 ஐபிஎஸ் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசின் உள்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், சென்னைப் பெருநகர காவல் துறையின் சைபர் க்ரைம் பிரிவின் துணை ஆணையர் கிரண் சுருதி, ராணிப்பேட்டை மாவட்ட எஸ்பியாக பணியிட மாற்றம் செய்யப்படுகிறார். ராணிப்பேட்டை மாவட்ட எஸ்பியாக பணியாற்றி வந்த தீபா சத்யன் சென்னையில் உள்ள மாநில காவல் கட்டுப்பாட்டு அறையின் எஸ்பியாக பணியிடமாற்றம் செய்யப்படுகிறார்.

கடலூர் மாவட்ட எஸ்பி சக்தி கணேசன் பணியிடமாற்றம் செய்யப்பட்டு, சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு எஸ்பியாக நியமிக்கப்படுகிறார். சென்னைப் பெருநகர காவல் துறை கொளத்தூர் காவல் மாவட்டம் துணை ஆணையர் ராஜராம், கடலூர் மாவட்ட எஸ்பியாக பணியிட மாற்றம் செய்யப்படுகிறார். கட்டாய காத்திருப்புப் பட்டியலில் உள்ள எஸ்பி ரவளி பிரியா, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணைய எஸ்பியாக நியமிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருவண்ணாமலையில் பவுர்ணமி கிரிவலம் இன்று தொடங்குகிறது

**திருவண்ணாமலை, பிப். 04-**

திருவண்ணாமலையில் பவுர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பவுர்ணமி கிரிவலம் இன்று(சனிக்கிழமை) இரவு 10.41 மணிக்கு தொடங்கி நாளை 5-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நள்ளிரவு 12.48 மணிக்கு நிறைவடைவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் பஞ்ச பூத ஸ்தலங்களில் அக்னி ஸ்தலமாக விளங்குகிறது. இந்த கோவிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். திருவண்ணாமலையில் மலையையே சிவனாக வழிபடுவதால் இக்கோவில் பின்புறம் உள்ள அண்ணாமலை என்று பக்தர்களால் அழைக்கப்படும் மலையை சுற்றி பவுர்ணமி நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்வார்கள்.

இந்த நிலையில் பவுர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரத்தை கோவில் நிர்வாகம் அறிவித்து உள்ளது. இந்த மாதத்திற்கான பவுர்ணமி இன்று(சனிக்கிழமை) இரவு 10.41 மணிக்கு தொடங்கி நாளை 5-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நள்ளிரவு 12.48 மணிக்கு நிறைவடைகின்றது. இந்த நேரத்தில் பக்தர்கள் கிரிவலம் செல்லலாம் என்று கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# குழந்தை திருமணங்களுக்கு எதிரான நடவடிக்கை தொடரும்

## அசாம் முதல்வர் அறிவிப்பு

**குவகாத்தி, பிப். 04-**

மாநிலத்தில் குழந்தை திருமணங்களுக்கு எதிரான நடவடிக்கை வரும் நாட்களிலும் தொடரும் என்று அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வ சர்மா வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், ‘‘காலை 8 மணி வரை, மாநிலத்தில் குழந்தை திருமணங்கள் தொடர்பாக சுமார் 1800 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அடுத்த மூன்று முதல் நான்கு நாட்களுக்கு இந்த நடவடிக்கை தொடரும். டிஜிபி மாலையில் பத்திரிகையாளர்களிடம் இதுதொடர்பான விவரங்களைப் பகிர்ந்து கொள்வார்.

இப்போதே, என்னிடம் கூட விவரங்கள் இல்லை. மாலைக்குள், கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கு எதிராக நாங்கள் எடுத்த நடவடிக்கை பற்றிய தெளிவான விவரங்கள் வெளிவரும். மாவட்ட வாரியாக செய்யப்பட்ட கைதுகளும் மாலையில் டிஜிபியால் பகிரப்படும்’’ என்று முதல்வர் மேலும் கூறினார்.

அசாம் முதல்வர் சர்மாவின் வழிகாட்டுதலின்படி, குழந்தை திருமணத்திற்கு எதிரான மாநிலம் தழுவிய நடவடிக்கை வியாழக்கிழமை இரவு தொடங்கப்பட்டது. குழந்தைத் திருமணம் என்ற தீய பழக்கத்தை மாநிலத்தில் இருந்து அகற்றும் அரசின் நடவடிக்கைக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என அம்மாநில முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### தெலுங்கானாவில் விரைவில் திறக்கப்படவிருந்த

# புதிய தலைமை செயலக கட்டிடத்தில் தீ விபத்து..!

**ஐதராபாத், பிப். 04-**

தெலுங்கானாவில் புதிதாக கட்டப்பட்டுள்ள தலைமைச் செயலகம் விரைவில் திறக்கப்படவுள்ள நிலையில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் தலைமைச் செயலக கட்டிடத்தில் இன்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டது. கட்டிடத்தின் தரை தளத்தில் ஏற்பட்ட தீ மளமளவென பரவி, அப்பகுதியில் புகை மண்டலமாக காட்சியளித்தது. இதையடுத்து பத்துக்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் சரியான நேரத்தில் சம்பவ இடத்திற்கு வந்து தீயை அணைத்ததாக போலீசார் தெரிவித்தனர். இந்த விபத்தில் எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை. தீ விபத்துக்கான உண்மையான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

புதிய தலைமைச் செயலகக் கட்டிடத்தை வருகிற 17-ம் தேதி அம்மாநில முதல்-மந்திரி கே.சந்திரசேகர் ராவ் திறந்து வைக்கத் திட்டமிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# அதானி விவகாரத்தில் 6-ம் தேதி போராட்டம்

## காங்கிரஸ் அறிவிப்பு

**புதுடெல்லி, பிப். 04-**

அதானி குழுமம் மீதான புகார் குறித்து விசாரிக்க வலியுறுத்தி நாடு முழுவதும் வரும் 6 ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என காங்கிரஸ் அறிவித்துள்ளது.

பங்குச் சந்தையில் தனது பங்குகளின் மதிப்பை உயர்த்திக் காட்டுவதற்காக அதானி குழுமம் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும், அமெரிக்காவைச் சேர்ந்த ஹிண்டன்பர்க் ரிசர்ச் நிறுவனம் ஜன.24-இல் வெளியிட்ட ஆய்வறிக்கையில் அதானி குழுமத்தின் பங்கில் 8 சதவீதத்தை, அதாவது ரூ.74,000 கோடி பங்குகளை எல்ஐசி வைத்துள்ளது. மேலும், அதானிகுழுமத்தின் கடனில் 40 சதவீதத்தை ஸ்டேட் பேங் ஆப் இந்தியா வங்கி வழங்கி உள்ளது என தெரிவித்திருந்தது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக ஞாயிற்றுக்கிழமை 413 பக்க அறிக்கையை வெளியிட்ட அதானி குழுமம், இது குறிப்பிட்ட அதானி நிறுவனத்தின் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல் அல்ல. மாறாக, இந்தியாவின் மீதும், அதன் சுதந்திரம், ஒற்றுமை, ஜனநாயக அமைப்புகளின் தரம், வளர்ச்சிக்கான பாதை மற்றும் இலக்குகளின் மீது நிகழ்த்தப்பட்ட திட்டமிட்ட தாக்குதல் என தெரிவித்திருந்தது.

இதற்கு, இந்தியக் கொடியை போர்த்திக் கொண்டு நாட்டை கொள்ளையடிக்கும் அதானி குழுமத்தால்தான் இந்தியாவின் வளர்ச்சி தடை படுகிறது என்றும், மோசடியை தேசியவாதத்தால் மறைக்க முடியாது என ஹிண்டன்பர்க் நிறுவனம் பதிலடி கொடுத்திருந்தது.

இதனைத் தொடர்ந்து அதானி குழுமம் மீதான ஹிண்டன்பர்க் முதலீட்டு ஆய்வு நிறுவனம் குற்றச்சாட்டுகளை பெயரளவில் விசாரிக்காமல் முழுமையாக செபி மற்றும் ரிசர்வ் வங்கி தீவிர விசாரணை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்நிலையில், அதானி குழுமம் மீதான புகார் குறித்து உரிய விசாரணை நடத்த வலியுறுத்தி நாடு முழுவதும் வரும் 6 ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என காங்கிரஸ் அறிவித்துள்ளது. எல்ஐசி, பாரத ஸ்டேட் வங்கி அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அகில இந்திய காங்கிரஸ் தலைவர் அறிவித்துள்ளார். அதானி குழுமத்தில் செய்த முதலீடு குறித்து பாலிசிதாரர்களுக்கு எல்ஐசி பதிலளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மேகாலயா சட்டசபை தேர்தல்:

# 60 தொகுதிகளிலும் பா.ஜ.க. போட்டி

**புதுடெல்லி, பிப். 04-**

மேகாலயாவில் மொத்தமுள்ள 60 தொகுதிகளிலும், நாகாலாந்தில் 20 தொகுதிகளிலும் பாஜக போட்டி யிடுகிறது.

வடகிழக்கு மாநிலமான திரிபுராவில் வரும் 16-ம் தேதியும், மேகாலயா, நாகாலாந்தில் வரும் 27-ம் தேதியும் சட்டப்பேரவைத் தேர்தல்கள் நடைபெற உள்ளன. இதில் மேகாலயா, நாகாலாந்து தேர்தல் குறித்து பாஜக செயலாளர் ரிதுராஜ் சின்ஹா டெல்லியில் நேற்று நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அவர் கூறியதாவது:

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு மத்திய அரசு தாராளமாக நிதியுதவி வழங்கி வருகிறது. ஆனால் மாநில அரசுகள் திறம்பட செயல்படாததால் பல்வேறு திட்டங்களின் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதோடு ஊழல் விவகாரங்களால் பொதுமக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

வடகிழக்கு மாநிலங்களை சேர்ந்த மக்கள், பிரதமர் நரேந்திர மோடி மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். இதை முன்னிறுத்தி மேகாலயாவின் 60 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் பாஜக போட்டியிடும். மோடியின் சக்தி என்பதை மையமாகக் கொண்டு பிரச்சாரத்தில் ஈடுபடுவோம். நாகாலாந்தில் மொத்தமுள்ள 60 தொகுதிகளில் 20 தொகுதிகளில் பாஜக போட்டியிடும். மீதமுள்ள 40 தொகுதிகளில் கூட்டணி கட்சிகள் போட்டியிடும். மேகாலயா, நாகாலாந்து சட்டப்பேரவைத் தேர்தல்களில் பாஜக அபார வெற்றி பெறும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மேகாலயாவில் முதல்வர் கான்ராட் சங்மா தலைமையிலான தேசிய மக்கள் கட்சி கூட்டணி ஆட்சி நடத்தி வருகிறது. இந்த கூட்டணி அரசில் பாஜகவும் இடம்பெற்றிருந்தது. கருத்து வேறுபாடு காரணமாக கூட்டணியில் இருந்து விலகிய பாஜக வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுகிறது. மொத்தமுள்ள 60 தொகுதிகளிலும் ஆளும் கூட்டணியை எதிர்த்து பாஜக களமிறங்குகிறது. நாகாலாந்தில் முதல்வர் நெய்பியு ரியோ தலைமையில் தேசிய ஜனநாயக முற்போக்கு கட்சி கூட்டணி ஆட்சி நடத்தி வருகிறது. இந்த கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் பாஜக 20 தொகுதிகளில் போட்டியிடுகிறது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று பேரறிஞர் அண்ணாவின் 54-வது நினைவு நாளையொட்டி வாலாஜா சாலையில் உள்ள அண்ணாசிலை அருகிலிருந்து காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடம் வரை அமைதிப் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் அமைச்சர் பெருமக்கள், சென்னை மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலில் நடைபெற்று வரும் தெப்பத்திருவிழாவின் 11-ம் நாளான நேற்று கதிர் அறுப்பு திருவிழாவிற்காக சுவாமியும், அம்பாளும் தங்கப்பல்லக்கில் சிந்தாமணி கிராமத்திற்கு புறப்பாடாகி சென்ற காட்சி.



முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை சென்னையில் நேற்று பா.ஜ.க. மேலிட பொறுப்பாளர் சி.டி.ரவி, பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை, துணைத்தலைவர் கரு.நாகராஜன் ஆகியோர் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்தனர். அருகில் முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் உள்ளார்.



முன்னாள் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமியை, சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று, பா.ஜ.க. மேலிட பொறுப்பாளர் சி.டி.ரவி, பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை, துணைத்தலைவர் கரு.நாகராஜன் ஆகியோர் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்தனர். அருகில் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் உள்ளார்.

# பொதுக்குழுவை கூட்டி...(1-ம் பக்க தொடர்ச்சி)

தாக்கல் செய்யும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

### ஓ.பி.எஸ். பதில் மனு...

இதே போல் ஓ.பி.எஸ். தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த பதில் மனுவில், பொதுக்குழு தொடர்பான வழக்கில் தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், இடையீட்டு மனுவை விசாரணைக்கு ஏற்க கூடாது. மேல்முறையீட்டு வழக்கில் அனைத்து விவகாரங்களும் அடங்கியுள்ள நிலையில், இடைக்கால மனு என்பது விசாரணைக்கு உகந்தது அல்ல.

### உரிமை கோர முடியாது...

ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் என்ற பதவிகள் காலாவதியாகி விட்டது என்பதை எதிர்த்த வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த வழக்கு மூலமே மேற்கண்ட பதவிகள் ரத்தாகி விட்டதா, இல்லையா என்பது முடிவாகும். அதுவரை எடப்பாடி பழனிசாமிக்கு கட்சியில் அதிகாரம் கேட்டு உரிமை கோர முடியாது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

### ஓ.பி.எஸ். தரப்பு பதில்...

இந்த வழக்கு நேற்று (வெள்ளிக்கிழமை) மீண்டும் விசாரணைக்கு வந்தது. இ.பி.எஸ், ஓ.பி.எஸ் மற்றும் தேர்தல் ஆணையம் தரப்பில் முன்வைக்கப்பட்ட அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், தற்போது உள்ள நிலவரப்படி பார்த்தால் இரு தரப்பு வேட்பாளரின் வேட்பு மனுவும் நிராகரிக்கப்படலாம். இருவரும் பேசி முடிவெடுக்கலாம் என்று கருத்து தெரிவித்தனர். இதற்கு, எங்கள் வேட்பாளரை ஓ.பி.எஸ் ஏற்க வேண்டும் என எடப்பாடி பழனிசாமி தரப்பு வலியுறுத்த, இல்லை, இல்லை பொது வேட்பாளரைத் தான் ஏற்க முடியும் என்று எடப்பாடி பழனிசாமி தரப்புக்கு ஓ பன்னீர் செல்வம் தரப்பு பதில் அளித்தது.

### பொதுக்குழு முடிவு...

இரு தரப்பினருமே கையெழுத்திட வேண்டாம். நாங்களே உத்தரவு பிறப்பிக்கிறோம் என்றும், இரு தரப்பினருமே முரண்டு பிடிக்கிறீர்கள். நாங்கள் சில தீர்வுகளை கொடுக்க விரும்புகிறோம் என்று சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தெரிவித்தனர்.

தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டிருப்பதால், நாங்கள் முக்கிய முடிவுகள் எதையும் பிறப்பிக்க முடியாது என்று கூறிய நீதிபதிகள் தினேஷ் மகேஸ்வரி, ரிஷிகேஷ் ராய், அ.தி.மு.க. வேட்பாளரை பொதுக்குழு முடிவு செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

### அவைத்தலைவரால்...

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளரை நிறுத்துவதற்கு இடைக்கால ஏற்பாடாக இந்த உத்தரவை பிறப்பிக்கிறோம். ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வேட்பாளரை அ.தி.மு.க. பொதுக்குழு முடிவு செய்யலாம். பொதுக்குழுவில் எடுக்கப்படும் முடிவு அவைத் தலைவரால தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

### இறுதி தீர்ப்புக்கு...

ஜூலை 11-ம் தேதி பொதுக்குழுவில் நீக்கப்பட்டவர்களை சேர்த்து இந்த பொதுக்குழுவை கூட்டவேண்டும் என தெரிவித்த நீதிபதிகள் இந்த இடைக்கால ஏற்பாடு ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலுக்கு மட்டுமே பொருந்தும் என கூறினர்.

மேலும் வேட்புமனு தாக்கல் செய்ய 7-ம் தேதி இறுதி நாளாக இருக்கும் போது இதில் என்ன முடிவெடுப்பது. இந்த விவகாரத்தில் பிறப்பிக்கப்படும் எந்த உத்தரவும் இறுதி தீர்ப்புக்கு கட்டுப்பட்டது என நீதிபதிகள் கூறினர்.

### சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு...

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் அ.தி.மு.க.வில் இ.பி.எஸ்-ஓ.பி.எஸ் என இரு அணிகளும் வேட்பாளர்களை அறிவித்துள்ள நிலையில், இரட்டை இலை சின்னம் என்னவாகும் என்கிற கேள்விக்கு விடை தெரியும் என்று எதிர் பார்க்கப்பட்ட நிலையில், பொதுக்குழு முடிவு செய்யும் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## எதிர்க்கட்சிகள் தொடர் அமளி-கூச்சல்:
# பாராளுமன்ற இரு அவைகளும் திங்கட்கிழமை வரை ஒத்திவைப்பு

புதுடெல்லி, பிப்.04-

அதானி குழுமம் விவகாரம் தொடர்பாக நேற்றும் எதிர்க்கட்சிகள் தொடர் அமளி மற்றும் கூச்சலில் ஈடுபட்டதால் பாராளுமன்ற இரு அவைகளும் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டன.

2023ம் ஆண்டிற்கான பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த 3 தினங்களுக்கு முன் ஜனாதிபதி உரையுடன் தொடங்கியது. பின்னர் கடந்த 1-ம் தேதி பாராளுமன்றத்தில் 2023-24ம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார். நேற்று முன்தினம் காலை பாராளுமன்ற மக்களவை தொடங்கியதும் எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டனர். இதன் காரணமாக இரு அவைகளும் மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர், நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது. இதேபோல், நேற்று காலை வழக்கம்போல பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் கூட்டம் தொடங்கியது.

அப்போது, அதானி குழும விவகாரம் தொடர்பாக, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் முழக்கத்தால் மக்களவை 2 மணி வரையிலும், மாநிலங்களவை 2.30 மணி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், மக்களவை 2 மணிக்கும், மாநிலங்களவை 2.30 மணிக்கும் கூட்டம் தொடங்கியது. கூட்டம் தொடங்கிய சில நிமிடங்களில் மீண்டும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். இதனால், இரு அவைகளும் வரும் 6ம் தேதி காலை 11 மணி வரை ஒத்திவைத்து அறிவிக்கப்பட்டது.

## பள்ளி சீருடையில் வந்த தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள்:
# புதுச்சேரி சட்டப்பேரவை கூட்டம் முடிந்தது

புதுச்சேரி, பிப். 04-

புதுச்சேரி சட்டசபை கூட்டம் வெறும் 24 மிடத்தில் முடிந்தது. சட்டசபைக்கு பள்ளி சீருடை மற்றும் மிதிவண்டியில் வந்து தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் பரபரப்பை ஏற்படுத்தினர்.

சட்டசபையை 6 மாதத்திற்கு ஒருமுறை கூட்ட வேண்டும் என்பது விதி. இதன்படி 6 மாத காலம் முடிவடைய உள்ளதால் புதுவை சட்டசபை நேற்று (வெள்ளிக்கிழமை) கூட்டப்பட்டது. சபாநாயகர் ஏம்பலம் செல்வம் குறள் வாசித்து சபை நிகழ்வுகளை தொடங்கி வைத்தார். கூட்டத்தில் முதல்வர் ரங்கசாமி மற்றும் அமைச்சர்கள் எம்.எல்.ஏ.க்கள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் மாணவர்களுக்கு இலவச சைக்கிள் மற்றும் சீருடைகளை விரைவில் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் சைக்கிளில் சட்டசபைக்கு வந்தனர். அவர்கள் பள்ளி மாணவர்கள் போல் புத்தக பையை தோளில் தொங்கவிட்டு வந்தனர். சபை கூடியதும் தி.மு.க. காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் அமளியில் ஈடுபட்டனர். பின்னர் வெளிநடப்பு செய்தனர்.

நேற்று தொடங்கிய சட்டசபை கூட்டம் 24 நிமிடத்தில் முடிவடைந்தது. சபையை காலவரையின்றி ஒத்திவைப்பதாக சபாநாயகர் ஏம்பலம் செல்வம் அறிவித்தார். இதைதொடர்ந்து சபை ஒத்திவைக்கப்பட்டது.




பேரறிஞர் அண்ணாவின் 54-வது நினைவுநாளையொட்டி நேற்று, சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுடன் உணவருந்தினர். அருகில் மாநகராட்சி நிலைக்குழு தலைவர் சிற்றரசு உள்ளார்.



பேரறிஞர் அண்ணாவின் நினைவுநாளை முன்னிட்டு, மதுரை நெல்பேட்டையில் உள்ள அவரது உருவச்சிலைக்கு, மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில், முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் அ.தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ஜெ.ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், டாக்டர் சரவணன், சுகந்தி அசோக், ஆர்.கே.ரமேஷ், ஜோசப் தனிஸ்லாஸ், எம்.எஸ்.செந்தில்குமார், கறிக்கடை முத்துகிருஷ்ணன், கார்னர் பாஸ்கர், கலைச்செல்வம், பஜார் துரைபாண்டி, புதூர் சந்திரன், ராணி நல்லுசாமி, முனிச்சாலை சரவணன், நூர்முகமது, ஜாகீர், மெடிக்கல் ரமேஷ் ஆகியோர் உள்ளனர்.